பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 24 செவ்வாய்க்கிழமை 06.04.2021 கதிர் 152

## இது ரகசியம் அல்ல!

நடிகர் ரஞ்சன் ராமநாயக்காவின் அரசியல் வாழ்க்கை நேற்றுடன் துன்பியல் நிகழ்வாக முடிவுக்கு வந்தது. நீதிமன்ற அவமதிப்புக்காக அவருக்கு உயர்நீதிமன்றம் விதித்த நான்கு வருட சிறைத் தண்டனைத் தீர்ப்பை மீளாய்வு செய்யக் கோரி அவர் தாக்கல் பக்கம்02 »

# பல்லாயிரக்கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் ஆயரின் திருவுடல் பேராலயத்தில் நேற்று நல்லடக்கம்!

## தமிழர் தாயகத்தில் துக்க தினம் அனுஷ்டிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியில் அயராது குரல் கொடுத்த மாபெரும் சாட்சியம் மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை யின் திருவுடல் பல்லாயிரக்கணக் கானோரின் கண்ணீருக்கு மத்தியில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த ஆய ரின் திருவுடலுக்கு வடக்கு, ☞2



## சிவஞானசோதி திடீர் மறைவு



சுயாதீன மனித உரிமைகள்தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் வே.சிவஞானசோதி ☞2

## யாழ்.வர்த்தகர்களுக்கு இலகுவான பி.சி.ஆர்.

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் இலகுவாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் பிரதேசங்களில் விசேட ஏற்பாட்டை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மேற் ☞11

# வடக்கு, கிழக்கு எங்கும் பௌத்த தொல்பொருள்

## நாடாளுமன்றில் கூட்டமைப்பின் கேள்விக்கு அரசு இப்படிப் பதில்

தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எங்கும் பெருமளவு பௌத்த தொல்பொருள் அடையாளங்கள் காணப்படுகின்றன என்று இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். ☞2



## ஆயருக்குக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் அஞ்சலி



மறைந்த மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், சபையில் அஞ்சலி செலுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது, மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ☞2

## கறுப்புப் பட்டியலில் உள்ளோர் சிறையில் அடைக்கப்படுவார்கள்

### கோட்டா அரசு அறிவிப்பு

இலங்கையிலுள்ள பலரது பெயர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள். அத்துடன் அவர்களுடன் தொடர்புகளைப் பேணுபவர்களும் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

-இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஊடகங்களிடம் ☞11

## மரியசேவியர் அடிகளின் இறுதி அஞ்சலி நிகழ்வு

### யாழ்.ஆயர் தலைமையில் இரங்கல் திருப்பலி இன்று

கலை இலக்கியத்துறையில் கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்துக் காலமான யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர், இயக்குநர் கலைத்தூது அருட் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளின் இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று ☞2



## யாழில் மேலும் 15 பேருக்கு கொரோனா

### மரணமானவருக்கும் தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 15 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது. ☞11

## மிருசுவில் காணி சுவீகரிப்பு நடவடிக்கை மக்களின் கடும் எதிர்ப்பால் இடைநிறுத்தம்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை அரசபடைகளின் தேவைகளுக்காகக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று மிருசுவில் பகுதியில் மேற்கொள்ளப்பட இருந்த நில அளவை நடவடிக்கைகள் பொது மக்கள், சிவில் அமைப்பினர் மற்றும் அரசியல்வாதிகள் ☞2

## வவுனியாவில் வாள்வெட்டில் இருவர் காயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, குருமன்காடு, காளிகோவில் வீதியில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, குருமன்காடு, காளிகோவில் வீதியில் ☞2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. எனினும் அந்தத் தீர்ப்புக்கு எதிராக இன்னும் அதே உயர்நீதிமன்றத்திலேயே மேன்முறையீடு செய்ய அவருக்கு வாய்ப்பு உண்டு.

எனினும், அவரது எம்.பி. பதவி பெரும்பாலும் இன்றுடன் பறிபோகின்றது. இதற்குப் பின்னர், அவருக்கு ஏற்கனவே உயர் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனை தள்ளுபடி செய்யப்பட்டாலும், அவரது எம். பி. பதவி மட்டும் அவருக்கு இப்போதைக்கு மீளக் கிடைக் காது என்பது மட்டும் நிச்சயம்.

உயர்நீதிமன்றம் அவருக்கு நான்கு வருடச் சிறைத் தீர்ப்பு வழங்கியமையை அடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார். தாம் சிறையில் அடைக்கப்பட்டாலும் தமது எம்.பி. பதவி அதனால் இழக்கப்பட்டதாக அர்த்தமாகாது என உத்தரவிடக் கோரி அவர் சார்பில் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. அதற்கு எதிராகவும் கூட ரஞ்சன் ராமநாயக்கா உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து நிவாரணம் பெற முயற்சிக்கலாம்.

ஆனால், சிறையில் அடைக்கப்பட்டமையை அடுத்து, நாடாளுமன்றுக்கு மூன்று மாதங்கள் சமுகம் தரத் தவறினார் என்ற அடிப்படையில் அவரின் பதவி இன்றுடன் காலியாகின்றது. அவரின் பதவி காலியாவது பற்றிய அறிவிப்பை சபாநாயகர் வெளியிட்டதும், விருப்பு வாக்குத் தெரிவில் அடுத்த, நிலையில் இருப்பவரை தேர்தல் ஆணையாளர் எம்.பியாக அறிவித்து விடுவார்.

அதற்குப் பின்னர் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை ரத்துச் செய்யும் உத்தரவையோ, அல்லது தனது எம்.பி. பதவி பறிக்கப்பட்டமையை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படக் கூடிய மேன்முறையீட்டில் தனக்குச் சார்பான நீதிமன்ற உத்தரவையோ அவர் பெற்றாலும் கூட அவரிடமிருந்து பறிபோன எம்.பி. பதவியை அவர் மீட்க முடியாது என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

அரசியலில் லஞ்சம், ஊழலுக்கு எதிராகக் குரல் எழுப்பிய ரஞ்சன் ராமநாயக்கா, அந்த லஞ்ச ஊழலுக்கு நீதித்துறை துணை போகின்றது என்ற குற்றச்சாட்டைப் பகிரங்கமாக முன்வைத்தமைக்காக சிறைக்குள் முடக்கப்பட்டமை இலங்கை அரசியலை சுத்தப்படுத்த எண்ணுவோரின் முயற்சியில் ஒரு துன்பியல் நிகழ்வாகவே நோக்கப்படும்.

★ ★ ★

யாழ். மிருசுவிலில் இராணுவத்தினரின் தேவைக்காக தனியாரின் நாற்பது ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்காக நேற்று அது அளவீடு செய்யப்படவிருக்கையில் தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் அதற்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்பட்டதல்லவா? அது தொடர்பில் ஒரு சொசுறுத் தகவல்.

காணி உரிமையாளரின் அனுமதி இன்றியே அந்த விஸ்தீரணமான நிலம் பல வந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு, அங்கு இராணுவ டிவிஷன் தலைமையகம் ஒன்று கட்டுமானங்களோடு அமைக்கப்பட்டு விட்டது. அதை சட்ட ரீதியாகக் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கான முயற்சியே இப்போது நடக்கின்றது.

இந்தச் சுவீகரிப்புக்கு எதிராக ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை என்று தெரிவித்து அரசுத் தரப்பு முன்வைத்த வாதத்தை ஏற்று அந்த வழக்கை மேன் முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அந்த மேன்முறையீட்டு மனுவை கடந்த வியாழக்கிழமைதான் உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்று அனுமதித்தது. அச்சமயம், இந்தக் காணி அளவீடு போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படலாம், அதனை மேற்கொள்ள வேண்டாம் என சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவிக்கும்படி மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் கோரிக்கையின் பேரில் அரச சட்டத்தரணிக்கு உயர்நீதிமன்றம் அந்த உத்தரவை வழங்கியிருந்தது.

அப்படி இருக்கையில் நேற்று காணி அளக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அது குறித்து சம்பந்தப்பட்ட அரச சட்டத்தரணிக்கு நேற்றுப் பகல் சுமந்திரன் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தி, நீதிமன்ற உத்தரவு மீறப்படுவதாகச் சுட்டிக் காட் டினார். நீதிமன்றப் பணிப்பு சம்பந்தப்பட்டோருக்கு இன்னும் கிட்டவில்லை என்றும், அதை அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தாம் உடனடியாகத் தெரியப்படுத்துகின்றார் என்றும் அரச சட்டத்தரணி உறுதியளித்தார். அதனடிப்படையில் சம்பந்தப்பட்டோருக்கு உடனடியாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக அறிய வந்தது.

★ ★ ★

கொரோனாத் தொற்றால் சிகிச்சைக்குச் சென்றிருந்த யாழ்.மேயர் வீ.மணிவண்ணன் சிகிச்சை முடிந்து மீண்டு விட்டார். எனினும் நாளைய தினத்துக்குப் பின்னர் தான் அவரது தனிமைப்படுத்தல் காலம் முடிகின்றது.

அதற்கிடையில் அடுத்த நாள் 8ஆம் திகதிக்கு அவர் மாநகர சபையின் மாதாந்த கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். அவரது கடமை உணர்ச்சி –பொறுப்புணர்வு – பாராட்டுக்குரியது.

எனினும், மாநகர சபையின் நான்கு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் இந்த அவசரம் Too Fast என்று எனக்குப்படுகின்றது.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

## மிருசுவில் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியோரின் பலத்த எதிர்ப்பால் இடை நிறுத்தப்பட்டது.

தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் அமைந்துள்ள ஜே.45 மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றப் பகுதியில், தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள தனியாருக்குச் சொந்தமான 40 முதல் 50 ஏக்கர் வரையுள்ள காணியை அந்த இராணுவ முகாமின் பயன்பாட்டுக்குக் கையகப்படுத்த நேற்று நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்தன.

குறித்த விடயத்தை அறிந்த காணி உரிமையாளர், சிவில் சமூகத்தினர், பொது மக்கள், மக்கள் பிரதிநிதிகள் போன்றோர் நேற்றுக் காலை குறித்த பகுதியை முற்றுகையிட்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் காணி அளவீடு செய்வதற்காக வந்திருந்த மாவட்ட நில அளவைத் திணைக்களப் பணிப்பாளர், பிரதேச செயலர் ஆகியோருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர், காணி அளவிடுவது இடைநிறுத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட்டது.

எனினும், சிறிது நேரத்தின் பின்னர், நில அளவைத் திணைக்களப் பணிப்பாளர் இராணுவ முகாமுக்குள் சென்றமையால் கூடியிருந்த மக்கள் ஒன்றுதிரண்டு பலத்த எதிர்ப்பை வெளியிட்டதுடன், தங்களை ஏமாற்றிவிட்டு காணி அளவீடு செய்ய முயல்கின்றனர் எனவும், உள்ளே சென்றவர்கள் எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் உடனடியக வெளியேற வேண்டும் எனவும் கூறி ஏ – 9 பிரதான வீதியை மறித்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 20 நிமிடங்களுக்கு மேலாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தால் அரச மற்றும் தனியார் பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதுடன் போக்குவரத்து நெரிசலும் உருவாகியிருந்தது.

இதன் பின்னர் வெளியே வந்த நில அளவைத் திணைக்களத்தினர் மக்களின் எதிர்ப்பையடுத்து குறித்த இடத்தில் இருந்து வெளியேறியதன் பிற்பாடே மக்கள் போராட்டத்தைக் கைவிட்டிருந்ததுடன், அளவை நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

வேலணை, காரைநகர் உட்பட பல பகுதிகளில் தொடர்ந்தும் மக்களுக்குச் சொந்தமான காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் அவை கைவிட்ட நிலையிலே நேற்று இந்தச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்ந்தால் நில அளவைத் திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் நேற்று போராட்டம் நடத்தியோர் தெரிவித்துள்ளனர்.

நேற்று அளவீடு மேற்கொள்ளப்படவிருந்த காணியானது போர் முடிவுற்ற பின்னர் 2011ஆம் ஆண்டளவிலேயே இராணுவத்தினர் 52ஆவது படைப்பிரிவின் முகாம் அமைக்கக் கையகப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பல்லாயிரக்கணக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிழக்கு மற்றும் நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்தும் பொதுமக்கள், அரச அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் எனப் பலர் அணிதிரண்டு அஞ்சலி செலுத்தினர்.

அதன்பின்னர் மன்னார் மறை மாவட்ட ஆயர் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ தலைமையில் இலங்கையில் உள்ள மறைமாவட்ட ஆயர்களின் கூட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட ஆயர்கள் கலந்துகொண்டனர்.

இரங்கல் திருப்பலியின் பின்னர் ஆண்டகையின் திருவுடலானது பேராலயத்திலேயே பல்லாயிரக்கணக்கானோரின் கண்ணீருடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதேவேளை, மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் நேற்று தமிழ்த் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. பல இடங்களில் மறைந்த ஆயரின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

மன்னார் மாவட்டத்தில் நேற்று பூரண கடையடைப்புடன் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. அங்குள்ள வீதிகள், வீடுகள் எங்கும் கறுப்பு மற்றும் வெள்ளை நிறக் கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் மன்னார் மாவட்டம் சோக மயமாகக் காணப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. தனியார் போக்குவரத்து சேவைகளும் இடம்பெறவில்லை.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு மற்றும் திருநாவற்குளத்திற்கு இடைப்பட்ட பகுதியில் வாள், கத்திகளுடன் ஒரு குழுவினர், பொது மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியதுடன், அப்பகுதியால் செல்வோரை வாள்களைக் காண்பித்து அச்சுறுத்தியும் உள்ளனர்.

இதன்போது குறித்த வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொர்பில் வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து வவுனியா, குருமன்காடு காளி கோவில் வீதிக்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன், வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புயைவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கையும் எடுத்திருந்தனர்.

அத்துடன், சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான கு.திலீபன் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்ய வேண்டும் எனவும், வவுனியாவில் வாள்வெட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார், குற்றச் செயல்கள் மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றால் உடனடியாக வவுனியா மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் இயங்கும் தமிழ் மொழி முறைப்பாட்டு பிரிவின் 0766224949 மற்றும் 0766226363 ஆகிய தொலைபேசி இலங் கங்களுக்கு உடனடியாக முறைப்பாடு செய்யுமாறும் அறிவுறுத்தினர். (100)

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல வினாக்களுக்கான நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் தொல்பொருள் ஆய்வுகள் குறித்த கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த நாட்டின் பெரும்பாலான தொல்பொருள் பகுதிகள் பௌத்த அடையாளங்களைக் கொண்டவை என்பதை மறுக்க முடியாது.

தமிழ் மக்களை இலக்கு வைத்து வடக்கு, கிழக்கில் தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

தொல்பொருள் ஆய்வுகளை முன்னெடுக்கும் வேளைகளில் பிரதேச செயலகத்துக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ அறிவிக்கப்படுவதில்லை. எவ்வாறு இருப்பினும் வடக்கில் விசேட கவனம் செலுத்தி முன் அறிவிப்பு விடுத்து ஆய்வுகளைச் செய்ய முயற்சிக்கின்றோம்.

இவ்வாறான ஆய்வுகளை முன்னெடுப்பதால் எந்தவொரு சமூகத்துக்கும் நெருக்கடிகள் ஏற்படுவதில்லை.

இவை எந்தவொரு மதம் அல்லது இனம் சார்ந்து எடுக்கும் ஆய்வுகள் அல்ல.

ஆனால், தவறான கருத்துக்களை முன்வைத்து, மக்களிடம் முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடாது.

நாட்டின் வரலாற்றை, தொன்மையை ஆய்வு செய்வதில் எந்தவொரு மதத்துடனும் இனத்துடனும் அது நின்றுவிடக்கூடாது. தமிழர்களுக்கும் இதுதான் நாடு. எனவே, சகலரது வரலாறுகளை ஆராய்வதே எமது நோக்கம் – என்றார்.

## மரியசேவியர் அடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெறவுள்ளது.

மரியசேவியர் அடிகளின் புகழுடல் நேற்றுக் காலை 10 மணி முதல் யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமாகும்.

தொடர்ந்து காலை 9.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அதன்பின்னர் மரியசேவியர் அடிகளின் புகழுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்று திருமறைக் கலாமன்றம் தெரிவித்துள்ளது.

## ஆயருக்குக் கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. உரையாற்றினார்.

இதன்போது, ஆயரின் இறுதிக் கிரியை நேற்று மாலை நடைபெறவுள்ளது எனக் குறிப்பிட்ட சார்ள்ஸ் எம்.பி., ஆயருக்கு தமிழ் மக்கள் சார்பாக தனது அஞ்சலியையும், வணக்கத்தையும் கூறிக்கொள்வதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை போர்க்காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அபத்துக்களை முன்நின்று தகர்த்து, மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சாட்சியாக உலக நாடுகளில் தன்னைப் பதிவு செய்தவர் என்றும், அவரின் இழப்பு தமிழ் மக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் ஈடுசெய்யப்பட முடியாத இழப்பாகும் என்றும் சார்ள்ஸ் எம்.பி. மேலும் கூறினார்.

## சிவஞானசோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு – அப்பலோ வைத்தியசாலையில் நேற்றுக் காலமானார்.

யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட வே.சிவஞானசோதி பல அமைச்சுக்களில் செயலாளராகக் கடமையாற்றியிருந்தார்.

குறிப்பாக இந்து கலாசார அமைச்சு, பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, வடக்குச் செயலணி, நல்லிணக்க அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகவும் கடமையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவில் கடும் காற்று தூக்கி வீசப்பட்டன கூரைகள்





முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட கிழவன் குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வீசிய கடும் காற்றுடன் கூடிய மழையால் வீட்டின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிழவன்குளம் பிரதேசத்தில் மாற்றுத்திறனாளியான ஒருவரின் வீட்டுக் கூரை இவ்வாறு காற்றில் தூக்கி வீசப்பட்டது.

வீட்டில் இருந்த ஐந்து வயதுக் குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன் வீட்டின் அனைத்துப் பொருள்களும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

## முன்னாள் தலைமை நீதிபதி மொஹான் பீரிஸ் நீக்கப்பட்ட விதம் தவறானது – அலி சப்ரி

கொழும்பு, ஏப்.06

முன்னாள் தலைமை நீதிபதி மொஹான் பீரிஸ், பதவியில் இருந்து நீக்கப்பட்டமை சட்டரீதியாக மேற்கொள்ளப்படவில்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் மொஹான் பீரிஸ் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறு சட்டரீதியாக நியமிக்கப்பட்டவரை, ஜனாதிபதியின் விருப்பப்படி அவருடைய செயலாளரின் கடிதத்தின் ஊடாக நீக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக்கோன், மொஹான் பீரிஸ் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அலி சப்ரி இவ்வாறு பதிலளித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த வேளையில், அவரது அறிவுறுத்தலின் பேரில், ஜனாதிபதியின் செயலாளர், அப்போதைய தலைமை நீதிபதி மொஹான் பீரிஸுக்கு பதவியில் இருந்து நீக்கியுள்ளதாக ஒரு கடிதத்தை



அனுப்பியிருந்தார்.

இந்நிலையிலேயே இந்த விடயம் தொடர்பில் அலி சப்ரி மேலும் கூறியுள்ளதாவது –

தவறை சரிசெய்ய வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க தற்போதைய அரசாங்கம் தயாராக உள்ளது.

இது தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தேவையான ஆலோசனையைப் பெறுவார் என்று நம்புகிறேன்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்

## வவுனியாவில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட பிக்குகள் உள்ளிட்டோருக்கு விளக்கமறியல்

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட இரு பிக்குகள் உள்ளிட்ட 11 பேரை ஏப்ரல் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பூவரசங்குளம், தாலிக்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வளாகத்தில் புதையல் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் சந்தேக நபர்களைக் கைதுசெய்திருந்தனர்.

அவர்களிடமிருந்து நிலத்தை தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டதுடன், 2 கார்கள் மற்றும் ஓட்டோக்களையும் பொலிஸார் பறிமுதல் செய்திருந்தனர்.

இந் நிலையில் சந்தேக நபர்களை நேற்று வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே நீதிவான் அவர்களை ஏப்ரல் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## ஓர் ஏக்கர் கஞ்சா பயிர்ச்செய்கை இராணுவத்தினரால் முற்றுகை





கதிர்காமம் வெஹரகல காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட கஞ்சா சாகுபடியை இலங்கை இராணுவத்தினர் அண்மையில் முற்றுகையிட்டுள்ளனர்.

வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் காவல்துறையினருடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சட்டவிரோத கஞ்சா சாகுபடியை அழித்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எப்லடொக்சின் அடங்கிய தேங்காயெண்ணெயை மீண்டும் மலேசியாவுக்கு அனுப்ப நடவடிக்கை

நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள எப்லடொக்சின் அடங்கியுள்ள தேங்காய் எண்ணெயை மீண்டும் மலேசியாவுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எப்லடொக்சின் அடங்கியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள 5 தேங்காய் எண்ணெய் கொள்கலன்களையே இன்று (செவ்வாய்க்கிழமை) மலேசியாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனியார் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட 13 தேங்காய் எண்ணெய் கொள்கலன்களியே எப்லடொக்சின் என்ற பதார்த்தம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை 100 கோடி தேங்காய் எண்ணெய் துகள்களில் 10 இற்கும் மேற்பட்ட எப்லடொக்சின் துகள்கள் இருந்தால், அது மனித உடலுக்குக் கடுமையான ஆபத்தை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்; ஒரு நாளில் பொலிஸாரால் மீட்பு

மருதனார்மடம் பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று ஒரு நாளில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மருதனார்மடம் பகுதியில் கடந்த சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வீதியில் மோட்டார் சைக்கிளை (வெகோ) வீதியில் நிறுத்திவைத்த உரிமையாளர், கடைக்குச் சென்றுள்ளார்.

கடையிலிருந்து திரும்பிய போது மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. அதுதொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அறிந்த யாழ்ப்பாணம் மாவட்ட புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்த விசாரணையில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை உரும்பிராயில் கைப்பற்றப்பட்டது. அதனைத் திருடிய சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார்.

28 வயதுடைய சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டார். மோட்டார் சைக்கிளும் பொலிஸில் பாரப்படுத்தப்பட்டது.

## படகு சவாரிக்குச் சென்ற இளைஞன் இயந்திர விசிறி வெட்டி பரிதாப பலி

யாழ்ப்பாணம், ஏப்.06

நண்பர்களுடன் கடலில் படகு சவாரி செய்த இளைஞன் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த கெனடி பிரின்ஸரன் (வயது 24) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

செம்பியன்பற்று கடலில் நண்பர்களுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை படகு சவாரி சென்றுள்ளார்.

அதன் போது படகில் இருந்து தவறி கடலினுள் விழுந்துள்ளார். அதன் போது படகின் இயந்திரத்தின் விசிறி வெட்டியுள்ளது. அத்துடன் குறித்த இளைஞன் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

சுழியோடிகள் துணையுடன் சுமார் இரண்டு மணிநேர தேடுதலின் பின்னர் படுகாயத்துடன் மீட்கப்பட்ட இளைஞன் மருதங்கேணி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ்ப்பாணம் – சென்னைக்கு இடையில் விரைவில் விமான சேவைகள் ஆரம்பம்

அரசு அறிவிப்பு

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்துக்கும் இந்தியாவின் சென்னைக்கும் இடையில் அடுத்த சில மாதங்களுக்குள் பயணிகள் விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாலைதீவை தென்னிந்திய இடங்களுடன் இணைக்கும் விமான நடவடிக்கைகள் இலங்கை வழியாக தொடங்கப்படும் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பல விமான நிறுவனங்கள் ஏற்கனவே இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளனஎனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாண விமான நிலையம் மூன்று கட்டங்களில் அபிவிருத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1,000 பயணிகளைக் கையாளும் அளவிற்கு முனையம் உருவாக்கப்படும் என்றும் பெரிய விமானங்களும் தரையிறங்கும் வகையில் ஓடுபாதை மேலும் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நல்லாட்சி அரசாங்கத்தில் யாழ்ப்பா ணம் விமான நிலையத்தில் சர்வதேச விமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இருப்பினும் கொரோனாத் தொற்று நோய் காரணமாக அதைத் தொடர முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை வங்கி ஊழியர் சங்கம் யாழில் பகிஷ்கரிப்புப் போராட்டம்





இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் நேற்று மதிய உணவு இடைவேளையுடன் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்துள்ளனர்.

மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக தமது போராட்டத்தை ஆரம்பித்த இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர், வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் வரை பேரணியாகசென்றதுடன் ஆளுநருக்கானமகஜரையும் கையளித்தனர்.

'ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கமைய வங்கி ஊழியர்களின் பயிற்சிக் காலத்தை இரண்டு வருடங்களுக்கு மட்டுப்படுத்துக', 'அதிகாரிகள் பயிற்சிக் காலத்தை நீடித்து வங்கி ஊழியர்களது உழைப்பினைச் சுரண்டுவதை உடனே நிறுத்துக', 'பிரதமரின் உத்தரவிற்கமைய இலங்கை வங்கியின் பயிலுநர் ஊழியர்களை இரண்டு வருடங்களில் நிரந்தரமாக்குக' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொழும்பின் கொள்கை

**கொள்கைகள் கோட்பாடுகளில் முரண்பட்டு நிற்போரை வைத்துக் கொண்டு விநோதக் கொள்கையில் ஆட்சியை நடத்துகின்றார் கோட்டாபய ராஜபக்ஷ.**

**கோட்டாபய ராஜபக்ஷவைத் தோற்கடித்தாலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வரக் காரணமாக இருந்த கொள்கைக் கோட்பாடு தோற்கடிக்கப்படக் கூடாது என்று அவரே அண்மையில் கூறியிருக்கின்றார்.**

**தமிழர்களைப் பொறுத்தவரை அவரை ஆட்சிப் பீடத்துக்கு – அதிகாரத்துக்கு – கொண்டு வந்த கொள்கைக் கோட்பாடு ஒன்றுதான்.**

**அது – பௌத்த, சிங்களத் தேசியவாதம் அல்லது பேரினவாதம். இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லப் போனால் பேரினவாத வெறி அல்லது மேலாண்மைத் திமிர்.**

**இப்போது ஆட்சிக் கட்டில் ஏறியிருப்பவர் கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமல்லர். அவருடன் சேர்ந்து பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மையும்தான்.**

**தான் தோற்றாலும், தம்மை அதிகாரத்துக்குக் கொண் வரக் காரணமாக அமைந்த கொள்கைக் கோட்பாடு தோற்றுவிடக் கூடாது, அதிகாரத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்துவது இந்தப் பேரினவாத மேலாண்மையைத்தான்.**

**இந்த இலங்கைத் தீவில் பிற சிறுபான்மை இனங்களின் தனித்துவத்தையும், அவர்களின் தாயகம் மீதான வாழ்வியல் உரிமைகளையும் சிதைத்தழித்து, அங்கெல்லாம் பௌத்த, சிங்கள மேலாண்மையை நிலைநிறுத்துவதுதான் இந்தப் பேரினவாத மேலாண்மைத் திமிரின் ஒரே இலக்கு.**

**அந்த இலக்கிலேயே கனகச்சிதமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது கோட்டா நிர்வாகம்.**

**பௌத்த, சிங்களப் பேரினவாத வெறி என்ற ஒரு தீவிரப் போக்கைத் தவிர, வேறு தெளிவான அரசியல் கொள்கைக் கோட்பாடுகளோ, உருப்படியான சித்தாந்தங்களோ, திட்டவட்டமான – தீர்க்கதரிசனமான – இலக்குகளோ இல்லாமல் அரசின் நாளாந்த விவகாரங்கள் தொடர்கின்றன.**

**அதனால் நாட்டின் எதிர்காலம் அதலபாதாளத்தில் விழப் போகின்றது. பொருளாதாரத்தில் மட்டுமல்ல, அபிவிருத்திக்கான அனைத்துத் துறைகளிலும் நாட்டின் செல்நெறி – போக்கு – நல்ல திசையில் இல்லை என்பது நிபுணர்களினதும் அவதானிகளினதும் கருத்து.**

**முக்கிய சிவில் நிர்வாகம் முன்னாள் படை அதிகாரிகளின் கைகளில் சிக்கிக் கொண்டு விட்டது.**

**மியன்மார், பாகிஸ்தான் போன்று எச்சமயத்திலும் இராணுவ ஆட்சி கட்டவிழக் கூடிய ஏது நிலைக்கான சூழல் உருவாக்கப்பட்டு வருகின்றது.**

**இதுவரை காலமும் நாடாளுமன்றத்துக்கும் பிரதமருக்கும் பகிரப்பட்டிருந்த பல அதிகாரங்கள் இருபதாவது அரசமைப்புத் திருத்தம் மூலம் மீண்டும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.**

**தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ்துறை போன்றவற்றின் சுயாதீனச் செயற்பாடு மறுக்கப்பட்டு, அவை ஜனாதிபதியின் ஏவல் அமைப்புகளாச் செயற்படுவது சட்டத்தின் பெயரால் உறுதிபடுத்தப்பட்டிருக்கின்றது.**

**இந்தப் பின்புலத்தில்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தாம் தோற்கடிக்கப்பட்டாலும் தன்னை அதிகாரத்துக்குக் கொண்டு வந்த கொள்கைக் கோட்பாடு தோற்கடிக்கப்படாமல் நிலை பெற்று – நிலைத்து – நீடிக்க வேண்டும் – என்று வற்புறுத்துகின்றார்.**

**அதாவது இந்த நாட்டில் பௌத்த, சிங்களப் பேரினவாதமே தொடர்ந்தும் ஆட்சிக் கட்டில் இருக்க வேண்டும் என்பது அவர் விருப்பு. பெரும்பான்மைச் சிங்களவர்களின் ஆசையும் கூட அதுதான்.**

**இலங்கை பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திலிருந்து – வெள்ளையர்களின் பிடியிலிருந்து – விடுபட்டதாகக் கூறப்படும் சுதந்திர இலங்கையின் காலத்தில் இருந்து பேரினவாதம் ஒன்று மட்டுமே இங்கு அரசோச்சி வருகின்றது என்பது உண்மைதான். அதன் 'டிகிரி'தான் கூடிக் குறைந்திருந்தது.**

**கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் அது சற்றுக் குறைந்திருந்தது. இப்போது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்.**

**'இந்த நாடு சிங்கள – பௌத்த நாடு. மற்றைய இனத்தவர்கள் எல்லோரும் – தமிழர்கள் உட்பட – வந்தேறு குடிகள். அவர்களுக்கு இந்த இலங்கைத் தீவில் தனித்துவ உரிமை எதுவும் கிடையாது.' – என்ற பேரினவாதக் கோட்பாடே இலங்கையில் கடந்த 74 ஆண்டுகளாக அதிகாரம் செலுத்தி வரும் அரசுகளின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது. அந்த பௌத்த – சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதியே கோட்டாபய ராஜபக்ஷ. அவரை ஆட்சி அதிகாரத்துக்குக் கொண்டு வந்த அந்த கொள்கைக் கோட்பாட்டை முழு அளவில் முன்னெடுக்கத் தவறுவோர் பௌத்த – சிங்கள நாட்டின் செல்வாக்கு அரசியலில் இருந்து இலகுவாகத் தூக்கி வீசப்படுபவர் – ரணில், மைத்திரிபோல.**

**இதுதான் இலங்கையின் மாற்ற முடியாத தலைவிதி. கெடுபோக்கு.**

# தனித்தமிழீழ நாட்டை இலங்கையில் அமையுங்கள் என்றே பௌத்த தேரர்கள் கூறுகின்றனர் – மனோ



தனித்தமிழீழ நாட்டை இலங்கைத் தீவில் அமையுங்கள் என தமிழர்களுக்கும் அதற்கு உதவுங்கள் என சர்வதேச சமூகத்துக்கும் தேரர்கள் மறைமுகமாகக் கூறுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று திங்கட்கிழமை முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள அவர், 'கறுப்பு ஜூலை புகழ் கொண்ட ஒரு தேரர் உட்பட பௌத்த தேரர்களின் குழு மூன்று பிரேரணைகளை தேசிய அரங்கில் முன்வைத்துள்ளது.

அதன்படி, நாட்டின் பெயரை 'சிங்களே' என மாற்ற வேண்டும், அதிகார பரவலாக்கம் வேண் டவே வேண்டாம், சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி ஆகிய பிரேரணைகளை முன்வைத் துள்ளன.

அதாவது இந்த தேரர்கள் மறைமுகமாக, 'உங்களுக்கு இங்கு இடமில்லை. தனித்தமிழீழ நாட்டை இலங்கைத் தீவில் அமையுங்கள்' என தமிழர்களுக்கும் 'அதற்கு உதவுங்கள்' என சர்வதேச சமூகத்துக்கும் கூறுகிறார்கள் என நினைக்கிறேன்.

ஆகவே, இந்த தேரர்கள்தான் இன்று இலங்கையின் பிரதான பிரிவினைவாதிகள். மீண்டும், மீண்டும், இலங்கைக்கு கறுப்பு 'பெயிண்ட்' அடிக்கிறார்கள்' எனத் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்ள உத்தேச புதிய அரசமைப்பு தொடர்பிலான நிபுணர் குழுவிடம் கடந்த சனிக்கிழமை பௌத்த மத சிரேஷ்ட தலைவர்கள் தமது யோசனைகளை முன்வைத்தனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர்கள், 'உத்தேச புதிய அரசமைப்பில் நாட்டின் பெயர் தனிச் சிங்கள இனத்தை பிரநிதித்துவப்படுத்துவதாக காணப்பட வேண்டும்.

சிங்கள மொழி மாத்திரம் அரசகரும மொழியாக அறிவிக்கப்படுவதுடன், தமிழ், ஆங்கிலம் மொழிகள் இரண்டாம் மொழியாகக் காணப்பட வேண்டும்' எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்புத் துறைமுக நகரத்தில் பணிபுரியும் 1,000 சீனப் பிரஜைகளுக்கு நேற்று தடுப்பூசி

கொழும்பு மாநகர சபையில் நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பிக்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தின் மூலம் இலங்கையில் உள்ள சீன நாட்டினருக்கு தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

அதன்படி, கொழும்புத் துறைமுக நகரத்தில் பணி புரியும் 1,000 சீனப் பிரஜைகளுக்கு நேற்று தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்தார்.

சீனா நன்கொடையாக வழங்கிய 6 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் கடந்த வாரம் இலங்கைக்கு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடு கடத்தப்பட்டு கைதானவர்களிடம் தீவிர விசாரணை; ஆதாரங்கள் சிக்கின

கொழும்பு, ஏப்.06

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட இருவர் அண்மையில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மடிக்கணினிகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில் இந்த இருவரும் தீவிரவாத போதனைகளை முன்னெடுத்திருந்தமை தெரியவந்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் வசிக்கும் இலங்கை குடும்பங்களுக்கே இவர்களால் தீவிரவாத சித்தாந்தங்கள் குறித்த போதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாகப் பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் றோஹண தெரிவிக்கையில் –


தீவிரவாதத்தைப் பிரசாரம் செய்ததற்காக ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட பின்னர் மாவனெல்ல மற்றும் கம்பொலவைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களையும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு கைதுசெய்திருந்தது.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து மடிக் கணினிகளையும் புலனாய்வுப் பிரிவு கைப்பற்றிய நிலையில், அந்த மடிக்கணினிகளை வல்லுநர்கள் பகுப்பாய்வு செய்து ஆய்வு செய்துள்ளதுடன் நிபுணர்களின் அறிக்கை, பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, மடிக் கணினிகளில் பல காணொளிகள் மற்றும் தீவிரவாதத்தின் சித்தாந்தத்தை ஊக்குவிக்கும் படங்கள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகள் இலங்கையை துண்டாட முயல்கின்றனவா?



**வல்லரசுகள் இலங்கையைத் துண்டாட முயல்கின்றன என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்கமாகக் கூறியுள்ளமை அவரின் தப்பான சிந்தனையின் வெளிப்பாடு எனத் தெரிவித்திருக்கின்றார் யாழ் மாவட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன். தமது வாரத்துக்கொரு கேள்வி - பதில் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதன் முழு விவரம் வருமாறு:-**

**கேள்வி:-** இந்து சமுத்திர வல்லரசுகளின் போட்டியில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அதிகாரப் பகிர்வு என்ற பெயரில் பிரிவினையைத் தூண்டப் பார்க்கின்றன என்று இலங்கை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்கமாகக் கூறியுள்ளாரே. அது பற்றிய உங்கள் பார்வை என்ன?

**பதில்:-** மேன்மைதகு ஜனாதிபதி அவர்களின் தப்பான சிந்தனையின் வெளிப்பாடு இது. ஏதோ இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு, தமிழர்கள் வந்தேறு குடிகள், எங்கிருந்தோ வந்த அவர்கள் வடகிழக்கில் பெரும்பான்மையாக வசிப்பதால் தமக்கென நாட்டின் ஒரு பகுதியைத் துண்டாடப் பார்க்கின்றார்கள் என்பது அவரின் கருத்து.

ஆனால் உண்மை அதுவல்ல. இலங்கை நாடானது என்றுமே தமிழ்ப் பேசும் இடங்கள், சிங்களம் பேசும் இடங்கள் என்று பிரிந்துதான் இருந்து வருகின்றது. இப்பொழுதும் புகையிரத வண்டி மதவாச்சியைத் தாண்டியதும் தமிழர்கள் சற்று மிடுக்குடன் தமிழில் குரல் எழுப்பிப் பேசுவார்கள். அதுவரையில் பெட்டிப் பாம்பு போல் அடங்கி இருந்தவர்கள் இராணுவத்தினர் வண்டிக்குள் இருந்தால் கூட சற்றுக் குரல் எழுப்பி தமிழில் பேசுவதைக் காணலாம். அதன் பொருள் தமிழ்ப் பேசும் இடங்களை நோக்கி புகையிரதம் புறப்பட்டு விட்டது என்பதே.

இந்த நாடு சிங்கள பௌத்த நாடல்ல. தமிழர்கள் வந்தேறு குடிகள் அல்லர். அவர்கள் இன்று நாட்டைத் துண்டாடக் கேட்கவில்லை. இலங்கையைத் துண்டாட வேண்டும் என்ற எண்ணமும் வல்லரசுகளிற்கு இல்லை. இதை கோட்டாபய ராஜபக்ஷ என்ற இளைப்பாறிய முன்னைய இராணுவ அதிகாரி புரிந்து கொள்ள வேண்டும். வெறுமனே பௌத்த பிக்குகள் சிலர் கூறும் தப்பான சரித்திரத்தை முன்வைத்து, தப்பான முடிவுகளுக்கு அவர் வரக் கூடாது. அவர் புரிந்து கொண்டால் தான் மேன்மைதகு ஜனாதிபதி அவர்கள் உண்மையைப் புரிந்து கொள்வார்கள். முழு நாட்டுக்கும், சகல மக்களுக்கும் நான் ஜனாதிபதி என்று கூறியவர் எவ்வாறு சிங்கள, பௌத்த சிந்தனையில் இருந்து கொண்டு நாட்டைப் பாரபட்சமின்றி நிர்வகிக்கப் போகின்றார் என்பது முக்கியமான ஒரு கேள்வி.

அவரின் கூற்று தவறானது.

## இது சிங்கள பௌத்த நாடல்ல.

இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழ்ப் பேசியவர்களே என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. பௌத்தம் இலங்கைக்கு கொண்டு வந்த போது அதனை ஏற்றவர்கள் தமிழர்கள். தேவநம்பிய தீசன் தமிழன். அவனின் தந்தை மூத்த சிவன் தமிழன். சிங்கள மொழி அப்போது பிறந்திருக்கவில்லை. அப்பொழுதிருந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே சிங்களம் என்ற ஒரு மொழி பரிணமித்தது. பௌத்தம் இலங்கைக்கு அறிமுகம் செய்த காலத்தில் தமிழ் மொழியில் பௌத்தக் கருத்துக்கள் கொண்ட நூல்கள் வெளிவந்தன. சிலப்பதிகாரம், மணிமேகலை இதற்கு உதாரணம்.

பின்னர் பெறப்பட்ட பௌத்த எச்சங்களும் தமிழர் காலத்தவையே. தமிழ் பௌத்தர்களின் காலத்து எச்சங்களே அவை. 'தமிழ் பௌத்தர்கள்' என்ற நூலை சிங்கள மொழியில் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன எழுதியுள்ளார்.

சைவர்களாக இருந்த இலங்கையின் ஆதிக் குடிகளான தமிழ் மக்கள் பலர் பௌத்தர்களாக மாறி பின்னர் காலாகாலத்தில் பௌத்தத்தைக் கைவிட்டு சைவ சமயத்திற்குத் திரும்பவும் மாறினார்கள். அற்புதங்கள் நிகழ்த்திய நாயன்மார்களின் வருகை அதற்கு உந்து கோலாக அமைந்தது. இன்றும் பௌத்தர்கள் பலர் அற்புதம் நிகழ்த்திய சாயி பாபா போன்றவர்களைச் சார்ந்து வாழ்வதைக் காணலாம்.

முன்னர் சைவம் தழைத்தோங்கிய இந்த நாட்டில் சில காலம் பௌத்தம் கோலோச்சியது. பௌத்தம் வர முன்னரே இலங்கையை ஐந்து ஈஸ்வரங்கள் (இலிங்கங்கள்) காத்து வந்திருந்தன. கீரிமலை நகுலேஸ்வரம், மாந்தோட்டை திருக்கேதீஸ்வரம், சிலாபத்து முன்னேஸ்வரம், திருகோணமலை திருக்கோணேஸ்வரம், தேவேந்திரமுனை(Dondra) தொண்டேஸ்வரம் என்ற ஐந்து இலிங்கங்கள் இலங்கைக்குக் காவல் அரண்களாக இருந்து வந்துள்ளன. ஆகவே தமிழ்ச் சைவ நாட்டில்த் தான் இன்று சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இலங்கையின் வடக்குக் கிழக்கில் இன்றும் சிங்கள பௌத்தர் அல்லாத தமிழ்ப் பேசும் மக்களே பெரும்பான்மையினர். எனவே முழுநாட்டையும் சிங்கள பௌத்த நாடு என்று அடையாளம் காட்டுவது மடமையின் உச்சக்கட்டம்.

## தமிழர்கள் வந்தேறு குடிகள் அல்லர்

குமரிக் கண்டம் எனப்படும் லெமூரியாக் கண்டம் பற்றி ஆய்வுகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. குமரிக் கண்டமானது தற்போதைய இலங்கையையும் உள்ளடக்கி மடகஸ்கார், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் வரையில் விரிந்து இன்றைய இந்திய சமுத்திரப் பரப்பில் குடிகொண்டிருந்தது. ஏழு நாடுகளை அது உள்ளடக்கி இருந்தது. ஏழு, எலு, ஈழம் போன்ற சொற்கள் இலங்கையைக் கொண்ட அந்த நாட்டைக் குறித்தது. சரித்திர காலத்திற்கு முன் தொடக்கம் தமிழ் மொழி பேசுபவர்கள் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். முதற் சங்கம் (கூடல்) தென் மதுரையில் 4,440 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தது. 89 பாண்டிய மன்னர்கள் அக் காலகட்டத்தில் ஆண்டார்கள். இறைவனார் அகப்பொருள் என்ற பின்னைய சங்க நூல் 549 புலவர்கள் அக்காலகட்டத்தில் பிரசித்தி பெற்றமை பற்றிக் கூறுகின்றது. முதற் சங்கத்தின் போது 16,149 நூலாசிரியர்கள் முதற்சங்கக் கூட்டங்களில் பங்குபற்றியமை பற்றிக் கூறுகின்றது. அகஸ்தியமே அப்போதைய இலக்கண நூல். முரஞ்சியூர் முடிநாகர் என்ற யாழ்ப்பாண நாக மன்னர் முதற் சங்கத்தில் கலந்து கொண்டதாக வரலாறு உண்டு. சித்த மருத்துவம் முதற் சங்க காலத்தில் நடைமுறையில் இருந்தது. ('தமிழர்கள் பாரம்பரியம் – 'சித்த வைத்தியம்' என்ற நூலைப் பார்க்கவும்) மேலும் ரிசட் வெயிஸ் (Richard Weiss) என்பவர் 2009 ஆம் ஆண்டில் வெளியிட்ட "Recipes for immortality: Medicine, Religion and Community in South India" (Oxford University Press) என்ற நூலைப் பார்க்க.

இரண்டாவது சங்கம் 3,700 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தது. 59 புலவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

மூன்றாவதும் கடைச் சங்கமுமான தமிழ்ச் சங்கம் 1,850 வருடங்கள் நிலை பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது. 49 புலவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

இவை பற்றிக் கூறுவதற்குக் காரணம் குமரிக் கண்டம் பற்றிய தகவல்கள் ருசுப்படுத்தப்படும் போது குமரிக் கண்டத்துல் இலங்கை இருந்தமையும் அங்கு தமிழர்கள் வாழ்ந்து வந்ததையும் நிரூபிக்க முடியும் என்பதால்.

எனவே தமிழர்கள் வந்தேறு குடிகள் எனும் போது குமரிக் கண்டம் காலத்தில் இருந்தே தமிழ்ப் பேசும் மக்கள் இலங்கையில் வசித்து வந்தமையை நாம் மறத்தல் ஆகாது. பாண்டியர்கள், பல்லவர்கள், சோழர்கள் என்ற பலர் படையெடுத்து வந்திருந்தாலும் சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்ப் பேசும் நாகர்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இங்கு வாழ்ந்து வந்த ஆதித் தமிழ்க் குடிகளுடன் பின்னைய தமிழர்களும் ஐக்கியமாகி இன்றைய தமிழர்கள் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதே உண்மை.

## நாட்டைத் துண்டாட தமிழர்கள் கேட்கவில்லை

முப்பது வருடகாலப் போரின் பின்னர், தமிழ்ப் பேசும் மக்கள் உலக நாடுகளின் கருத்தை அறிந்த பிறகு, போர்க்கால குறிக்கோள்களை விட்டு இந் நாட்டில் தமிழ்ப் பேசும் மக்கள் எவ்வாறு நீதி, நியாயம், மதிப்பு, மரியாதை போன்றவற்றின் அடிப்படையில் ஒரே நாட்டுக்குள் தொடர்ந்து வாழ முடியும் என்ற கேள்விக்குப் பதில் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தற்போது நாட்டைத் துண்டாடக் கேட்கவில்லை. ஒரே நாட்டில், நடைமுறையில் இருக்கும் வித்தியாசத்தை, வேற்றுமையை, தனித்துவத்தைப் பேணி பல் இனங்கள் ஒருமித்துப் பயணிக்க முடியுமா என்ற விடயத்தையே ஆராய்ந்து கொண்டு இருக்கின்றனர். அவர்கள் நாட்டைத் துண்டாடக் கேட்கவில்லை என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரே நாட்டினுள் இருக்கும் வேற்றுமைகளை அனுசரித்து எப்படிப் பல் இனங்கள் பயணிக்க முடியும் என்றே கேள்வி எழுப்பிக் கொண்டு இருக்கின்றார்கள்.

> போர்க்கால குறிக்கோள்களை விட்டு இந்நாட்டில் தமிழ்ப் பேசும் மக்கள் எவ்வாறு நீதி, நியாயம், மதிப்பு, மரியாதை போன்றவற்றின் அடிப்படையில் ஒரே நாட்டுக்குள் தொடர்ந்து வாழ முடியும் என்ற கேள்விக்குப் பதில் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். நாட்டைத் துண்டாடக் கேட்கவில்லை. வேற்றுமையை, தனித்துவத்தைப் பேணி பல் இனங்கள் ஒருமித்துப் பயணிக்க முடியுமா என்ற விடயத்தையே ஆராய்ந்து கொண்டு இருக்கின்றனர்.

நாட்டைத் துண்டாட வேண்டும் என்ற எண்ணம் வல்லரசுகளிற்கு இல்லை.

பொதுவாக நாடுகள் துண்டாடப்படுவதைச் சர்வதேச நாடுகள் எதிர்க்கின்றன. அதாவது ஒவ்வொரு சிறிய மக்கட் கூட்டமும் தாமிருக்கும் நாட்டில் தனித்துத் தமக்கென ஒரு அலகை உண்டாக்க முற்பட்டால் அது கூட்டு சேர்ந்திருக்கும் பல பெரிய வல்லரசுகளுக்குப் பாதகமாய்ப் போய்விடும். உதாரணத்திற்கு ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஒவ்வொரு அலகும் தனியாக இயங்கக் கோரிக்கை விடுத்தால் என்ன நடக்கும்? அமெரிக்காவின் தற்போதைய பலம் குன்றிவிடும். ரஷ்ய நாட்டில் இதுவே நடந்தது.

ஆகவே நாடுகளைப் பலம் குன்றச் செய்வது வல்லரசுகளின் குறிக்கோள் அல்ல. நாடுகள் தமது அலகுகளின் உரிமைகளை ஏற்று ஒன்றுபட்டு ஒரே நாடாக முன்னேற வேண்டும் என்பதே அவர்கள் குறிக்கோள். அவர்களுள் பலர் இவ்வாறு பலமுடன் ஒன்று சேர்ந்து பயணிக்க சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி முறையையே தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

எவர்,எது கூறினாலும் இலங்கையின் வடகிழக்கு பாரம்பரியமாகத் தமிழ்ப் பேசும் இடங்கள். அங்கு பெரும்பான்மையாகத் தமிழர்கள் 3,000 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்களின் தனித்துவம் பேணப்பட வேண்டும் என்பதே தமிழர்களினதும் சர்வதேச நாடுகளினதும் எதிர்பார்ப்பாகும்.

மேற்படி கூற்றில் மேலும் ஒரு விடயத்தை நாம் அவதானிக்க முடிகிறது. வல்லரசுப் போட்டியில் அவை பிரிவினையைத் தூண்டப் பார்க்கின்றன என்று கூறும் போது வேறொரு கருத்து தொக்கி நிற்கின்றது.

அதாவது இந்தியாவும் மேற்கு நாடுகளும் தருணம் பார்த்து தமிழர்களுக்குச் சார்பாக நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார்கள் என்பதே அது.

பூனைகள் இரண்டு ஒரு ரொட்டியைப் பிரிக்க முடியாமல் குரங்கிடம் ஆலோசனை கேட்டன.

**(11 ஆம் பக்கம் பார்க்க...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir







# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கறுப்புக் கொடிகட்டி ஆயருக்கு அஞ்சலி

## மன்னாரில் துக்கதினமும் அனுஷ்டிப்பு

மன்னார் மறைமாவட்ட மறைந்த ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்று முன்னெடுக்கப் பட்டது.

வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் குறித்த நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட் டது. அத்துடன், கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கதினமும் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த உறவுகள் –

எமது இனத்துக்காகவும் நீதிக்காகவும் போராடிய உன்னதமான மனிதராக அவர் இருந்தார். பாதிக்கப்பட்ட மக்கள் என்றவகையில் அவரது மரணம் எமக்குப் பேரிழப்பாகவே இருக்கிறது. அதனை ஈடுசெய்ய எவரா லும் முடியாது. அவரது உயிர் பிரிந்தாலும் அவர் எம் மோடே என்றும் பயணிப்பார்.– எனத் தெரிவித்தனர்.

## வீதிகளில் வீசப்படும் கழிவுகளால் வவுனியாவில் சுகாதாரச் சீர்கேடு



வவுனியாவின் பிரதான வீதியோரங்களில் வீசப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடான நிலை உருவாகியுள்ளதுடன் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக பண்டாரிக்குளம், மற்றும் வைரவபுளியங்குளம் குளக் கட்டு வீதிகள், ஈச்சங்குளம் பிரதான வீதி, பூந்தோட்டம் சாந்தசோலை வீதி, கல்வியியற்கல்லூரி வீதி, சிதம்பரபுரம் ஆகிய வீதிகளிலும், வடிகான் ஓரங்களிலும் பொதுமக்களால் அதிகப்படியான கழிவுகள் வீசப்பட்டு வருகின்றன.

வீட்டுக்கழிவுகள், மலக்கழிவுகள், கடைக்கழிவுகள், என்பன அப்ப குதிகளில் வீசப்படுவதால் வீதி எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன், அந்த வீதிகளால் அசௌகரியத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு வீசப்படும் கழிவுகள் ஓடும் நீரினாலும், விலங்குகள், பறவைகளால் காவிச்செல்லப்பட்டும் வீதிகளில் பரவிக்கிடக்கின்றன. இதனால் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளதுடன் தொற்றுநோய் பரவக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி களைச் சேர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் வருகைதரும் சில நபர்களே தொடர்ச்சியாக அப்பகுதிகளில் குப்பைகளை வீசி சீர்கேட்டை ஏற்படுத்துகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக உள்ளூராட்சிச் சபைகள் கவனம் செலுத்தி கழிவு முகாமைத்துவத்தை சரியானமுறையில் ஏற்படுத்த வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுப்பதுடன், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர்.

## அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி 2 ஆவது டோஸ் செலுத்தும் நடவடிக்கை 19 இல் ஆரம்பம்

### சுதர்ஷினி தெரிவிப்பு



அஸ்ட்ராஜெனெகா கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லையென இராஜாங்க அமைச் சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதன்படி, இரண்டாவது டோஸின் தடுப்பூசித் திட்டம் ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் எனவும் மூன்று லட்சம் டோஸ் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி இரண்டாவது டோஸுக்குப் பயன்படுத்தப் படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணா திலக நேற்று (திங்கட்கிழமை) நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்தும் நடவ டிக்கை, ஏப்ரல் 19 முதல் ஜூன் 30 வரை நடை பெறும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியாவில் இருந்து முன்பதிவு செய்யப்பட்டுள்ள அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி களும் கொவேக்ஸ் திட்டத்திலான மீதமுள்ள தடுப்பூசிகளும் இந்தக் காலகட்டத்தில் பெறப் பட்டுவிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளின் இரண்டாவது டோஸை வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது என அவர் கூறியுள் ளார்.

## ஜனாதிபதி தலைமையில் சஹால் மங்கல்ய நிகழ்வு



புத்தருக்கு முதல் அறுவடை வழங்கும் வருடாந்திர சஹால் மங்கல்ய நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலை மையில் நடைபெற்றது.

அநுராதபுரத்திலுள்ள ஜெய ஸ்ரீ மகா போதியில் இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

54 ஆவது தேசிய சஹால் மங்கல் யாவை, விவசாய அமைச்சகம் மற்றும் வேளாண் சேவைகள் துறை ஆகியன இணைந்து, அட்டமாஸ்தானதிபதி டாக்டர் வென் பல்லேகம சிரினிவாச நாயக்க தேரர் வழிகாட்டலில் நடந்தது.

பெரும்பாலான விவசாயிகள், சஹால் மங்கல்யாவில் கலந்துகொண்டு, ஆசீர் வாதங்களைப் பெற்றனர். மேலும் பாரம்பரி யத்தின் படி, தங்கமுலாம் பூசப்பட்ட கிண்ணத் தில் நிரப்பப்பட்ட அரிசி, ஜெய ஸ்ரீமகா போதி முன் வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வென் தலைமை யிலான மகா சங்கத்தினரின் சேத் பிரித் தின் கோஷங்களுக்கு மத்தியில் கிண் ணத்தை அரிசியில் நிரப்பும் சடங்கை ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ செய்தார்.

குறித்த நிகழ்வைத் தொடர்ந்து ஜனாதி பதி, ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த உழவர் சங்க பிரதிநிதிகளுக்கு துறவிகளால் ஆசீர்வதிக்கப்பட்ட விதை நெல்லை விநி யோகித்தார்.

அத்துடன் ஸ்ரீ மகா போதிக்கு பூக்கள் மற்றும் வெள்ளி நாணயங்களை வழங்கி ஜனாதிபதி ஆசீர்வாதங்களைப் பெற்றார்.

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நிதியுதவியில் சிகை ஒப்பனையாளர் சங்கத்தினருக்கு உலருணவு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதியுதவியில் யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தினருக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் வேகமாகப் பரவிவரும் கொரோனாத் தாக்கம் காரணமாக பல சுயதொழில் முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் சிகை ஒப்பனையாளர்க ளும் கடுமையான தொழில் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதன்காரணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் அறிவுறுத்தலுக்கமைய, அவரின் நிதி ஒதுக்கீட்டில் சிகை ஒப்ப னையாளர் சங்கத்தினரிடம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், நல்லூர் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் சுரேஷ்குமார் ஆகியோர் ஊடாக இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கராஜவனம் அழிக்கப்படுவதாகக் கூறி அரசியல் இலாபம் தேடும் எதிர்க்கட்சி

## விமலவீர திஸாநாயக்க காட்டம்

சிங்கராஜவனப்பகுதி அழிக்கப்படுவதாக கூறி எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். கிராமப் புற மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை சுற்றுசூழலுக்கு எதிரான செயற்பாடு எனக் கருத முடியாது என வனபாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் அரச அதிகாரத்துடன் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கூறிக் கொண்டு எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். சிங்கராஜ வனப் பகுதியின் நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக முறையான விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு விவகாரம் தற்போது அரசியல் மயப்படுத்தப் பட்டு விட்டன. சிங்கராஜ வனப்பகுதி தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் சூழ்ச்சிகள் உள்ளக மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. உள்ளக மட்டத்தில் சுற்றுசூழல் விவகாரம் பிரதான குற்றச்சாட்டாகக் காணப்படுகிறது.

வனப்பகுதியை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குக் காணப்படுகிறது. கிராமிய புறங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அபிவிருத்தி நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கும் போது அதனைச் சுற்றுச் சூழலுக்கு எதிரான செயற்பாடு எனக் குறிப்பிடமுடியாது.



நல்லாட்சி அரசாங்கத்தில் வில்பத்து காடு அரச அதிகாரத்துடன் அழிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாகத் தற்போது சூழலியலாளர்கள் என குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எவரும் அன்று எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. சுற்றுச்சூழக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் எவ்வித அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்கவில்லை. வனப் பகுதியின் பரப்பை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளும் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. – என்றார்.

# சர்ச்சையை ஏற்படுத்திய தேங்காயெண்ணெய் ஆபத்து தொடர்பில் எச்சரிக்கும் விஜயதாஸ

100 கோடி தேங்காய் எண்ணெய் துகள்களில் 10 இற்கும் மேற்பட்ட எப்லடொக்சின் துகள்கள் இருந்தால், அது மனித உடலுக்கு கடுமையான ஆபத்தை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தேங்காய் எண்ணெய் தொடர்பில் விஜயதாஸ ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு–

பரிசோதிக்கப்பட்ட எண்ணெய் மாதிரிகளில், ஆறு மாதிரிகள் 10 மற்றும் 14 இன் எப்லடொக்சின் மதிப்பை விட அதிகமாக இருந்தன, அவற்றில் ஐந்து மதிப்பை மீறின. அதில் எட்டு மாதிரிகளில் எப்லடொக்சின் இல்லை.

அதாவது 100 கோடி தேங்காய் எண்ணெய் துகள்களில் 10 இற்கும் மேற்பட்ட எப்லடொக்சின் துகள்கள் இருந்தால், மனித உடலுக்குக் கடுமையான ஆபத்தை ஏற்படுத்தும்



இதேவேளை தேங்காய் மேம்பாட்டு ஆணையத்தின் பணிப்பாளர் ஜெனரல் எம்.எல்.டி. நிரோஷன, மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எப்லடொக்சின் மாதிரிகள் இல்லையென பொய் கூறினார்.

மேலும் புற்றுநோய் ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணெயை, மக்கள் உட்கொள்ள ஊக்குவித்தமை, அவர்கள் வாழ்க்கையை அழிக்கும் முயற்சியாகவே அவதானிக்கத் தோன்றுகின்றது. – என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# தடுப்பூசி ஏற்றுமதிக்கு எந்தத் தடையுமில்லை

## இந்திய உயர்தூதரகம்

கொவிட் -19 தடுப்பூசிகளின் ஏற்றுமதிக்கு இந்தியா எந்த தடையும் விதிக்கவில்லை என்று இலங்கையில் உள்ள இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர் தூதரகம் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் –

புது டில்லியில் உள்ள இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் 2021 ஏப்ரல் 2 அன்று கொவிட் - 19 தடுப்பூசிகளின் ஏற்றுமதிக்கு தடை விதிக்கவில்லை என்று தெளிவாகக் கூறினார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிட் தடுப்பூசி விநியோகம் செய்யப்படும் 80 நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இந்த ஆண்டு ஜனவரியில் இந்தியாவில் இருந்து பரிசாக வழங்கப்பட்ட முறையாக அங்கீகரிக்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கொவிட் 19 தடுப்பூசிகள் இலங்கையில் உள்ள பயங்கரமான தொற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசித் திட்டங்களுக்கு முதன்மையாகத் தொடங்கப்பட்டது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிஷீல்ட் தடுப்பூசியின் ஒரு கோடியே 25 லட்சத்துக்கும் அதிகமான டோஸ்கள் இதுவரை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

எந்தவொரு நாடும் தனது சொந்த மக்களுக்கு தடுப்பூசி போடும்போது வேறு நாடுகளுக்கு இந்த அளவு தடுப்பூசிகளைப் பகிர்ந்து கொள்ளவில்லை.

இந்தியாவில் கொவிட் – 19 தடுப்பூசிகளின் உற்பத்தி உள்நாட்டு தேவை மற்றும் உலகளாவிய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் அதிகரித்து வருகிறது என்றும் இந்திய உயர் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொரோனாத் தடுப்பூசியின் ஏற்றுமதி தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சி கூறியுள்ளவை வருமாறு –

'கொரோனாத் தடுப்பூசிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக 'வேக்சின் மைத்ரி' என்ற திட்டத்தை இந்தியா அமுல்படுத்தியுள்ளது.

'இந்தத் திட்டத்துக்கு உலக நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

'அதன்படி, இந்தத் திட்டத்தின் மூலம் 80 நாடுகளுக்கு மேலாக சுமார் 6 கோடியே 44 லட்சம் தடவை போடக்கூடிய தடுப்பூசிகளை இந்தியா அனுப்பியுள்ளது.

'இதனால் இந்தியாவிற்கு கொரோனாத் தடுப்பூசி தட்டுப்பாடு ஏற்படும் என்று பயப்படத் தேவையில்லை. உள்நாட்டின் தடுப்பூசித் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னரே வெளிநாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்வதாக ஏற்கெனவே தெரிவித்துள்ளோம். இதனை உலக நாடுகள் சரிவரப் புரிந்துகொள்ளும் என்று நம்புகிறோம்.

'எனவே வெளிநாடுகளுக்குத் தடுப்பூசி ஏற்றுமதி செய்வதில் எந்தவொரு தடையும் பிறப்பிக்க வில்லை. இந்தியாவின் பயன்பாட்டுக்குப் போக எஞ்சி இருப்பவை தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்படும்,' – என்று தெரிவித்தார்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கடந்த அரசில் அனைவருக்கும் தண்டனை வழங்கவேண்டும்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் உள்ள பிரதான சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்படாவிட்டால் அது தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவே அமையும். இதன் உண்மை வெளிப்படுத்தப்பட்டால் மாத்திரமே நாட்டின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கிடைக்கும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரமன்றி பிரதமர் உள்ளிட்ட முழு அமைச்சரவையும் பொறுப்புக் கூற வேண்டும். அத்தோடு குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரமின்றி கடந்த அரசாங்கத்திலுள்ள சகலருக்கும் உச்சபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு விவகாரத்தை தற்போதைய அரசாங்கத்தால் புறந்தள்ள முடியாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதாகக் கூறியே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றார். பொதுத் தேர்தலிலும் இதனையே கூறினார். எனினும் இம்மாதம் 21 ஆம் திகதியுடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடையவுள்ள போதிலும் பிரதான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்கான முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவனவாகத் தெரியவில்லை.

பேராயர் உள்ளிட்ட முழுகத்தோலிக்க சமூகமும் இதில் சந்தேகம் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் கேள்வியெழுப்பப்பட்டது. ஜனாதிபதி ஆணைக்குழுவிலும் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியது சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர் என்பதும், முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோருக்கு தகவல் கிடைத்திருந்தும் தாக்குதலைத் தடுக்கத் தவறியுள்ளனர் என்பதும் சகலரும் அறிந்த விடயமாகும்.

இதனையே ஜனாதிபதி ஆணைக் குழுவும் குறிப்பிட்டுள்ளது. எனவே மக்களுக்கு இந்த செயற்பாடுகள் மூலம் திருப்தியடைய முடியாது. எனவே அடுத்தகட்டமாக எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதை அவதானித்துக் கொண்டிக்கின்றோம். உண்மையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை அறிய அனைவரும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறவுள்ளன என 2019 ஏப்ரல் 4 , 20 மற்றும் தாக்குதல் இடம்பெற்ற தினமான 21 ஆம் திகதி காலை என பல சந்தர்ப்பங்களிலும் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுக்கத் தவறிய முழு அரசாங்கத்துக்கு எதிராகவும் அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக மாத்திரமன்றி முழு அமைச்சரவையும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

அத்தோடு இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள பிரதான சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்படாவிட்டால் அது தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவே அமையும். இதன் உண்மை வெளிப்படுத்தப்பட்டால் மாத்திரமே நாட்டின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கிடைக்கும். அவ்வாறில்லை என்றால் தேசியப் பாதுகாப்பு தொடர்ந்தும் அச்சுறுத்தல் மிக்கதாகவே காணப்படும். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# முல்லைத்தீவு மாவட்டத்தின் வளம் அந்த மாவட்ட மக்களுக்கு இல்லை


- ந.லோகதயாளன் -

இலங்கையில் முதல் 10 பெரிய மாவட்டங்களில் ஒன்றான முல்லைத்தீவு மாவட்டம் பொருளாதார வளர்ச்சியில் கடைசி மாவட்டமாக அல்லது 24ஆவது மாவட்டமாகவே ஆண்டுதோறும் இடம் பிடிக்கின்றது. இது, இந்த மாவட்டத்தின் வறுமை ஒழிப்பு மற்றும் நாட்டின் ஆட்சி முறைமையில் சீரான நடவடிக்கை யினையும் சீரான கவனத்தையும் செலுத்தவில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 24 வீதமே வனப்பகுதியாகக் காணப்படுகின்றது. இந்த அளவை 30 வீதமாக அல்லது 29 வீதமாகவேனும் அதிகரிக்க அரசு முயல்கின்றது. அரசின் இந்த முயற்சி வனப் பகுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்த அல்லது தேவைக்கான எத்தனம் எனக் காட்டப்படுகின்றது. இலங்கையிலேயே அதிக வனப்பகுதியைக் கொண்ட இரண்டாவது மாவட்டமாக முல்லைத்தீவு விளங்கு கின்றது. இதனைப் பேணிப் பாதுகாக்க விரும்புகின் றமை ஆட்சி முறைமைத் தீர்மானம்.

ஆனால், இங்கே ஆட்சி முறைமையில் மழை, சூழல் பேணல், நாட்டின் வளிமண்டல சமநிலைக் காக எட்டப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத் துவதில் அரசு சீரான நடவடிக்கையினைக் கொண்டு செல்லவில்லை என்பதே முக்கிய விடயமாகின்றது.

**மாவட்டத்தின் 70 வீத நிலம் அந்த மாவட்டத்திற்குச் சொந்தமில்லை.**

முல்லைத்தீவு மாவட்டமானது 2 ஆயிரத்து 614 ச. கி. மீற்றர் பரப்பளவை உடைய 6 பிரதேச செயலா ளர் பிரிவைக் கொண்ட மாவட்டம். அதாவது 2 லட் சத்து 69 ஆயிரத்து 300 ஹெக்டேயர் நிலமாகும். இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக் களத்தின் ஆளுகையில் உள்ள பிரதேசம் மட்டும் ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 721 ஹெக்டேயர். இது மாவட்டத்தின் மொத்த நிலத்தின் 66.37 வீதமாகும். இங்கே எஞ்சியுள்ள 34 வீத நிலத்தில் 13 வீதமான நிலம் அதாவது 35 ஆயிரத்து 403 ஏக்கர் வயல் நிலமாகவுள்ளது. 4.6 வீதமான நிலம் சதுப்பு நில மாகவும் உள்ளதோடு எஞ்சிய நிலப்பரப்பே மாவட்ட மக்களின் வாழ்வாதாரம், அரச, தனியார் நிர்வாக மையங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் என அனைத்துப் பயன்பாட்டிற்கும் உள்ளது.

*Table No.1.8*

**LAND USE PATTERN - 2019**

| S. No | Land Use | Area (ha) | Percentage % |
|---|---|---|---|
| 1 | Agriculture Land | 35,403.40 | 13.15 |
| 2 | Non Agriculture Land | 2,717.92 | 1.01 |
| 3 | Homesteads / Home Garden | 19,271.79 | 7.16 |
| 4 | Forest Land | 178,721.09 | 66.37 |
| 5 | Wet Land | 5,868.30 | 2.18 |
| 6 | Water Bodies | 20,338.73 | 7.55 |
| 7 | Other Land | 6,978.77 | 2.59 |
| | **Total** | **269,300.00** | **100.00** |

*Source:* District Land Use Planning Office, District Secretariat, Mullaitivu

இவ்வாறு ஒரு மாவட்டத்தின் 70 வீதமான நிலத்தை தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள மத்திய அரசின் ஒரு தேசிய கொள்கைத் திட்டத்திற் காக முல்லைத்தீவு உட்பட சில மாவட்டங்களே உதவு கின்றன என்பதனை அறிந்தும் இந்த மாவட்ட மக் களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளான வாழ் வியல், இல்லிடம், மருத்துவம் என்பவற்றை போக் காத காரணமே மாவட்டம் தொடர்ந்தும் பின்ன டைவை சந்திக்க காரணமாகின்றது.

வனத்தை மட்டுமன்றி 78 குளங்களையும் உரிமை கோருகின்றது வனவளத் திணைக்களம்.

வாழ்க்கைக்கான அடிப்படை தேவையை பூர்த்தி செய்யாத அரசு, தங்களிடம் இருப்பதனையும் தடுக் கும் வகையிலேயே செயற்படுவதாக மாவட்ட விவ சாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அதாவது முல்லைத் தீவில் நடுத்தரக் குளங்கள் யாவும் கமநல அபிவி ருத்தி திணைக்களத்தின் ஆளுகையிலேயே உள் ளன. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் பிரசுரிக் கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டக் கமநல அபி விருத்தித் திணைக்களத்திடம் 273 குளங்கள் காணப்படுகின்றன. ஆனால், இதில் தற்போது 195 குளங்கள்தான் இந்த திணைக்களத்தின் ஆளுகை யில் உள்ளன. இவற்றையே மாவட்ட விவசாய செய்கைக்கு அது அனுமதிக்கின்றது. எஞ்சிய 78 குளங்களும் தமது ஆளுகைப் பகுதிக்குள் இருப்ப தாக தெரிவிக்கும் வனவளத் திணைக்களம், அத னால், கமநல சேவைத் திணைக்களத்தை எந்த நட வடிக்கைகளிற்கும் அனுமதிப்பது கிடையாது. அத னால் குளமும் பாழடைய, விவசாயமும் பாழ் அடைந்து, மக்களின் வாழ்வியல் கேள்விக்குறியாகி நிற்பதோடு, போரில் அனைத்தையும் இழந்து மீள எழத் துடிக்கும் மக்களின் வாழ்வியலை நசுக்கி ஒரு பெரும் சட்ட மீறலையே இப்போக்கு ஏற்படுத்து கின்றது.

இத்தகைய நெருக்கடி நிலவும் மாவட்டத்தில் தற்போது மேலும் 12 ஆயிரம் ஏக்கர் - அதாவது 5 ஆயிரம் ஹெக்டேயரை தமக்குச் சொந்தமானது என வர்த்தமானியில் பிரசுரிக்க சகல நடவடிக்கையினை யும் வனவளத் திணைக்களம் பூர்த்தி செய்து தலைமை அலுவலகத்திற்கு கடந்த ஆண்டு அனுப் பியும் விட்டது.

**குறி வைக்கப்படும் மற்றுமோர் கனிய வளம்**


அதிக வறுமையில் வாடும் மாவட்டத்தில் தற் போது மேலும் ஒரு முக்கிய கனிய வளம் 2016இல் அடையாளம் கண்டுகொள் எப்பட்டதனால், அதனை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்த மாவட்ட நிர் வாகம் கோரியபோதும், அதனைப் புறக்கணித்து, இரகசியமாக மத்திய அர சின் கீழ் உள்ள கனிய வளக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டு செல்ல முயற்சிக்கப்படுகின்றது.

இத்தனை வளம்மிக்க ஒரு மாவட்டம் ஏன் இலங் கையின் பொருளாதாரத் தில் கடை நிலையில் உள்ளது என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்த ரும் புவியியல் துறை வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை தனது கருத்தை தெரி விக்கையில் -

விவசாயத்தையும், மீன்பிடியையும் மட்டுமே நம்பி இருப்பதே முல்லைத்தீவு மாவட்டத்தின் முத லாவது பின்னடைவு. மீன்பிடியில் முதலாளி வேறு நபராக இருப்பார். கடலிற்குச் செல்பவர் தினக் கூலி யாளாகவே காணப்படுவார். அதனால் இதன் உழைப்பு வேறு மாவட்டத்திற்கே அதிகம் செல்லும். இதேபோன்று மிக அடிப்படையான கல்வி, மருத்து வத்திற்காகவே வாழ்வில் அதிக நிதி செலவிடப்படும். அந்த இரண்டிற்குமே இந்த மாவட்டத்தின் நிதி வெளி மாவட்டங்களிற்கே செல்கின்றது . இவற்றை தடுக்க பாரிய கைத்தொழிற்சாலைகள், வைத்தியசாலை கள், கல்விக்கூடங்கள் வர வேண்டும்.



இதேநேரம் இவற்றை அதிகமாகக் கொண்டு வருவதற்கு குடிசன அடர்த்தியும் போதுமானதாக இல்லை. வேறு மாவட்ட மக்கள் தொகை ஒரு லட் சத்து 50 ஆயிரம்தான் உள்ளது. இருப்பினும் அந்த மாவட்டத்தில் உள்ள பல்லாயிரம் பேருக்கு அங்கே இன்னும் நிலம் இல்லை.



Divisional Secretariat- Maritimepattu

Director
Lanka Mineral Sand Department.
Rajagiriya.

**Joint Inspection at Kokkilai Mineral Mining Area 27.04.2017**

The joint inspection made by Divisional Secretary, Coastal Conservation Department, District Secretariat Mullaitivu Geological Department Jaffna and Environmental Authorities and Lanka Mineral Colombo for mineral Mining at Kokkulai Coastal Area The following suggestion is making by me for your further action.

1. Six (06) km length can be allow from Kokkulai Mukaththuvaram for Mining Mineral.
2. The Livelihood of the fishermen and Mathalpaadu cannot disturb by mining action
3. The mineral factory should be built at Kokkulai and the job opportunities should be given to Kokkulai Thennamaravady and Kokkuthoduwai people.
4. Impact on Environment Assessment Report should be prepared before starting work.
5. Mineral Mining plan should be submitted before the mining to the District Environment Committee and get the approval from the Environmental Committee.
6. Back filling of the Mining Area should be made properly.
7. Corporate Social Responsibilities (CSR) should be measured
8. Monthly Environmental Report and Geological Mining Inspection Report should be submitted to the Environmental Committee.
9. All the Terms and Conditions should be signed as an Agreement with Divisional Secretariat Maritimepattu.
10. When the Lanka Mineral Breach of Contract or Agreement Divisional Secretary should has the power to reject the approval.

S.Gunapalan
Divisional Secretary,
Maritimepattu,

Copy to : 1.Director, Coastal Conservation Department
2.Government Agent, Mullaitivu
3.Geological Department, Jaffna

இதேபோன்று போருக்கு முன்னரே முல்லைத் தீவின் முக்கிய வருமானத்தில் காட்டுப்பொருளாதாரம் பெரும் பங்காற்றியது. இதில் விறகு, உடும்பு பிடித் தல், பாலைப்பழம், தேன் சேகரிப்பு போன்றவற்றுடன் மயில் இறகு, கரடி எண்ணை, பாம்பு எண்ணை என அன்றே ஆயிரக் கணக்கான பெறுமதியில் வரு மானத்தை ஈட்டியவர்கள் இன்று அவற்றை இழந் துள்ளனர். இவற்றை சட்டத்தின்பால் தடுப்பதில் மட் டும் கவனம் செலுத்திய அரசு அவற்றை மேற்கொண் டவர்களுக்கான மாற்றுப் பொருளாதாரம் தொடர்பில் சிந்திக்கத் தவறிவிட்டது.

இவை அரச பக்கத் தவறுகளாக இருக்கும்போது, அந்த மாவட்டத்தில் கல்வி கற்று, தர முன்னிலை அடிப்படைக்கு அப்பால், அந்த மாவட்டத்தின் மக்கள் தொகையின் அடிப்படையில் பல்கலைக்கழகம் சென்றவர்கள் கூட அந்த மாவட்டத்தில் சேவையாற்ற முன்வராது வெளிநாட்டிற்கும் கொழும்பு, யாழ்ப்பா ணம், வவுனியா போன்ற பிற இடங்களை நாடுவதும் பின்னடைவிற்கு மிக முக்கிய காரணமாகவே உள் ளது. - என்றார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக மக்கள் ஓரணியில் திரள வேண்டும்



## ஸ்ரீ ஞானரத்ன மகாநாயக்க தேரர் அழைப்பு

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்துக்கு எந்தவொரு கட்சி தொடர்பும் இல்லாமல் நாட்டு மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர், வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன மகா நாயக்க தேரர் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் நாம் ஒரு நாடாக ஒன்றுபடாதமையால் தான் எங்களுக்கு எதிரான சக்திகள் பயனடைகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யு.என்.எச்.ஆர்.சியில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் ஓர் அரசாங்கமாக நாங்கள் அதை எவ்வாறு எதிர்கொண்டோம் என்பது தொடர்பில் பொதுமக்களுக்கு பொதுவான புரிதல் இருக்க வேண்டும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

அந்தவகையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் நடக்குமென யு.என்.எச்.ஆர்.சி. நம்புகிறது. மேலும் முத்தரப்புப் படைகளை வேட்டையாடுவதற்கும் சர்வதேச நீதிமன்றங்களுக்கு முன்பாக 128 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவழிப்பதற்கும் ஒரு தீய திட்டம் நடந்து வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

கண்டியில் ஊடகங்களுடன் பேசிய அமைச்சர், நாட்டின் எதிர்காலம் குறித்து முடிவுகளை எடுக்க வெளிநாட்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்படா எனவும் கூறியுள்ளார்.

மேலும் மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் யு.என்.எச்.ஆர்.சி.அதிகாரம் குறித்து கவலைகளை எழுப்பிய பேராசிரியர் பீரிஸ், நாட்டின் உள் விவகாரங்களை கட்டுப்படுத்த அனுமதிக்க வேண்டுமா என்பது கேள்விக்குரியது, இதில் சட்டங்களை உருவாக்குதல், அரசமைப்பில் திருத்தங்கள், நியமனங்கள், முத்தரப்பு மற்றும் அரசு சேவை, நாடாளுமன்றத்தின் பயன்பாடு என்ன என்று கேள்வி எழுப்பினார்.

இலங்கையைப் பயன்படுத்துவதன் மூலம் ஏனைய நாடுகள், தங்கள் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க கட்சி வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்துப் பிரிவுகளும் ஒன்றுபட வேண்டும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

ஐ.நாவிலுள்ள சில நாடுகளின் தலைவர்கள், தேர்தல்களுக்கு புலம்பெயர்ந்தோரின் ஆதரவை வெளிப்படையாகக் கோரியுள்ளனர். இந்நிலையில் எந்தவோர் அரசியல் கட்சியும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் எழுப்பவில்லை என்றால், அது நாட்டுக்கு எதிரான துரோகத்தின் வடிவமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசின் செயற்பாட்டிற்கு எதிராக மக்கள் குரல் கொடுக்க வேண்டும்

## ரணில் கோரிக்கை



அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளுக்கு மக்கள் அனைவரும் கட்சி பேதமின்றி குரல் கொடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளவை வருமாறு -

சிங்கராஜவனத்தில் நீர்த்தேக்கம் ஒன்றை அமைத்து அதனூடாக அம்பாந்தோட்டை பகுதிக்கு நீர் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

குறித்த செயற்பாடு வனப் பாதுகாப்பு சட்டத்துக்கு முரணானது என்பதுடன் சிங்கராஜா வனத்திலுள்ள ஒரு மரத்தேனும் வெட்டுவது கூட சட்டவிரோத செயற்பாடாகவே சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த வனம், நாட்டின் பிரதான மலைக்காடாக இருக்கின்றது. இந்நிலையில் இப்பகுதியில் நிலப்பகுதிகளும் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

குறித்த சட்டவிரோத செயற்பாட்டை, அரசாங்கம் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் இந்த வனத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து மக்களும் கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நுகர்வுப் பொருள்கள் இறக்குமதி மோசடிக்கு அரசு கடும் நடவடிக்கை எடுப்பது அவசியம்

## ரிஷாத் பதியுதீன் வலியுறுத்தல்



மக்களின் நாளாந்த நுகர்வுப் பொருள்களான சீனி மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் இறக்குமதியில் இடம்பெற்றனவாக நம்பப்படும் மோசடி, துஷ்பிரயோகம் தொடர்பில் அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் காங்கிரஸின் மத்திய குழு உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

சீனி மோசடியாளர்களை இனம் கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் இந்த விடயம் கோப்புக்கு வந்துள்ளது.

கொள்ளையடித்த பணத்தை மீள அரசுக்கு வழங்க வேண்டும். எண்ணெயில் புற்றுநோய் கலப்படம் இனிமேல் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறக் கூடாது யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். - என்றார்.

மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு மேலும் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கையில் உள்ள மீனவர்கள் இன்று மீன்பிடித்துறையில் மிகவும் பின் அடைந்தவர்களாக குடும்ப வாழ்வாதாரத்தில் முகங்கொடுக்க முடியாது கஷ்டப்படுகின்ற போது வெளிநாட்டு மீனவர்கள் இலங்கையில் வந்து மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது என்பது புத்திசாலித்தனமல்ல. அதை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம்.

இந்த நாடு நமக்குச் சொந்தமானது எந்த இனமாக இருந்தாலும் மீன் பிடிக்கலாம்.

எமது மீனவர்களுக்கே கடலில் மீன்பிடிப்பதற்கு பல தடைகளையும் தடங்களையும் இடர்பாடுகளையும் செய்து கொண்டிருக்கின்ற மீன்பிடி அமைச்சு வெளிநாட்டவர்களுக்கு வழங்குவார்களாயின் அதற்கு எதிராக மீனவர் சமூகத்துடன் சேர்ந்து ஜனநாயக ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இலங்கை மீனவர்கள் யுத்த சூழ் நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு கிழக்கில் மீண்டும் இவ்வாறான மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கைவைக்கக் கூடாது அவர்களது பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். - என்றார்.

# 10 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை

சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையம் திறக்கப்பட்ட கடந்த ஜனவரி 21ஆம் திகதி முதல் கிட்டத்தட்ட 10 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்தனர் என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கஜகஸ்தான், ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், உக்ரைன், ரஷ்யா, இந்தியா, சீனா, சுவிட்ஸர்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து மொத்தமாக 9 ஆயிரத்து 629 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, புதிய விமான நிறுவனங்களை ஈர்ப்பதற்கும் தற்போதுள்ள விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் தூதரகங்கள் மற்றும் விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

உலகளாவிய கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வருவதால் பல நாடுகள் தங்கள் எல்லைகளை மீண்டும் திறக்க எதிர்பார்க்கும் நிலையில், இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்ற சுற்றுலாப் பயணிகளுக்கு தனிமைப்படுத்தப்பட்ட நிவாரணம் வழங்குவதற்கான கலந்துரையாடல்களும் நடைபெற்று வருகின்றன எனவும் இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்புவதற்கான தனிமைப்படுத்தப்பட்ட விதிகளை தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## கள்ளி வகை தாவர பராமரிப்பில் காணப்படும் பொதுவான ஐந்து தவறுகள்:



கள்ளி வகை தாவரம் நம்ப முடியாத அளவுக்கு வலுவான தாவரமாகும் அதேபோல் அவை மிகச் சிறந்த உணர்திறன் கொண்டவை மற்றும் கவனமாக பராமரிக்கப்படவேண்டியவை. அதிகப்படியான நீர் அல்லது குறைவான நீர் விநியோகம் போன்ற காரணிகளோடு ஏராளமான காரணிகள் கள்ளி வகை தாவர வளர்ச்சியை பாதிக்கும்.

1. எல்லா கள்ளி வகை தாவரகளையும் ஒரே மாதிரியாக கவனித்தல் அல்லது பராமரித்தல்.
2. அதிகப்படியான நீர் பாவனை அல்லது குறைந்த நீர் பாவனை.
3. சிறிய கொள்கலன்கள் பயன்பாடு மற்றும் மோசமான மண் தெரிவு.
4. மிகக் குறைந்த சூரிய ஒளியை வழங்குதல் அல்லது அதிகமான சூரிய ஒளியை வழங்குதல்.
5. பூச்சிக்கொல்லிகளை தவறாகப் பயன்படுத்துதல்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் களவாடப்பட்ட 50 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் சிக்கின

## சந்தேகத்தில் இருவர் மாட்டினர்



கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் களவாடப்பட்ட சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான பல உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த களவு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நாளை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நிறுவனம், கடை, தேவாலயம் மற்றும் வீடு உள்ளடங்கலாக 7 இடங்களில் களவாடப்பட்ட உபகரணங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் யாழ். பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவின் வழிகாட்டலில், யாழ். பொலிஸ் நிலையக் குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி சி.ஐ. நெவில் பியந்த தலைமையிலான குழுவினரே களவாடப்பட்ட உபகரணங்களை மீட்டு சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.

# நாடு கடத்தப்பட்டவர்களிடம் சி.ஐ.டி., ரி.ஐ.டி. விசாரணை



சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனியிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 24 பேரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.), பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு (ரி.ஐ.டி.) என்பன விசாரணைகளை நடத்தும். அதன் பின்னரே அவர்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும்.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஊடகங்களிடம் தெரிவித்தார்.

குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தை மீறி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஜேர்மனிலிருந்து 20 பேரும், சுவிட்சர்லாந்தில் இருந்து 4 பேரும் சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந் தனர்.

அவர்கள் இராணுவத்தின் கண்காணிப்பில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஒருவருக்கேனும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை

## விரைவில் சட்ட நடவடிக்கை வேண்டும் என்று சஜித் அணி வலியுறுத்து

கொழும்பு, ஏப்ரல் 05

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஈராண்டுகள் நெருங்கினாலும் கூட தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கேனும் நீதி மன்றத்தில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான சட்டத்தரணி அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அமெரிக்காவில்கூட வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கேனும் இலங்கை நீதிமன்றத்தில் இன்னும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. அத்துடன், தாக்குதல் சம்பவத்தின் பின்னணி மற்றும் பிரதான சூத்திரதாரிகளும் கண்டறியப்படவில்லை. அதனை நோக்கி விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரியவில்லை. கட்டாயம் தாக்குதலின் பின்புலம், பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டும். அப்போதுதான் நீதி கிடைக்கும்.



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை தடுத்து நிறுத்தத் தவறியவர்கள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

# போராடி பெறுவதே எங்களின் வரலாறு

## மனோ எம்.பி. தெரிவிப்பு



தனித்தமிழ்ப் பிரிவு என்றால், கொடுப்பதை வாங்கிக் கொண்டு மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இதுதான், வித்தியாசம். எழுதி வைத்துக் கொள்ளுங்கள். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு பறிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவரின் முகநூல் பதிவு வருமாறு:-

மத்திய மாகாணத்தில் ஆரம்பித்து, இப்போது ஊவா மாகாணம் வரை, மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு என்ற இயந்திரம் ஒழிக்கப்பட்டு, தமிழ்ப் பிரிவு ஆகிவிட்டது.

6 தமிழர் பெரும்பான்மை பிரதேச சபைகளை நுவரெலியாவில் போராடிப் பெற்றதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வரலாறு. இருப்பதையும் இழப்பது இப்போதைய வரலாறு.

தனியான தமிழ்க் கல்வி அமைச்சு என்றால் மாகாண சபை வரவு - செலவுத் திட்டத்தில், எங்கள் பாடசாலை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகத் தனியான நிதி ஒதுக்கீடு கிடைக்கும்.

தனித்தமிழ்ப் பிரிவு என்றால், கொடுப்பதை வாங்கிக்கொண்டு மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இதுதான், வித்தியாசம். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம் - என்றுள்ளது.

# ரஞ்சன் ராமநாயக்கவின் எம்.பி. ஆசனம் மனு நிராகரிப்பு



கொழும்பு, ஏப்ரல் 05

தனது நாடாளுமன்ற ஆசனம் இல்லாமல் செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் எழுத்தாணை ஒன்றைப் பிறப்பிக்குமாறு ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று நிராகரித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் அர்ஜுன் ஒபேசேகர மற்றும் மாயதுன்னே கொரயா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாமினால் அந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் எவ்வித சட்ட அடிப்படையும் இல்லை எனவும், இதனால் மனு நிராகரிக்கப்படுகின்றது எனவும் தீர்ப்பை அறிவித்த தலைமை நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர தெரிவித்தார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், கடந்த ஜனவரி 12ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வுக்கு உயர்நீதிமன்றத்தால் 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, குறித்த சிறைத்தண்டனைக்கு அமைய, ரஞ்சன் ராமநாயக்க அவரது எம்.பி. பதவியை இழந்துள்ளார் என்று சட்டமா அதிபர், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்து, மூன்று மாதங்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் தொடர்ச்சியாகக் கலந்துகொள்ள முடியாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசனம் இல்லாமல் செய்யப்படும் என்பதற்கு அமைய, எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி ரஞ்சன் ராமநாயக்கவின் 3 மாத காலம் நிறைவடையவுள்ளது.

அதற்கு முன்னர் அவரது எம்.பி. பதவியைப் பறிப்பதை இடைநிறுத்தி உத்தரவிடுமாறு, அவரது சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இதன்படி, கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, ரஞ்சன் ராமநாயக்க வால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு உட்படுத்துவதற்கான அறிவித்தலை வெளியிடுவதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று வரை ஒத்திவைத்திருந்தது.

இந்தநிலையில், குறித்த மனு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காகவே ரஞ்சன் ராமநாயக்கவுக்குச் சிறைத்தண்டனை விதிக் கப்பட்டுள்ளதே தவிர குற்றச்செயல்கள் தொடர்பில் அல்ல எனவும், அதனால் அவருடைய நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்து செய்யப்படுவது சட்ட அடிப்படையற்றது எனவும் ரஞ்சன் ராமநாயக்க சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும், சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டு கருத்து வெளியிடும் போது ரஞ்சன் ராமநாயக்க கோரியுள்ள நிவாரணத்தை வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று சுட்டிக்காட்டினார்.

அதனால் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் தள்ளுபடி செய்யுமாறு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதன்படி, சிறைத்தண்டனை அனுப வித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணையின்றி நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு கிளிநொச்சியில் அஞ்சலி நிகழ்வு

மன்னார் மறைமாவட்ட மறைந்த முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) கிளிநொச்சியில் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் பசுமை பூங்கா வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சின்மயா மிஷன் சுவாமிகள், பங்கு தந்தையர்கள் மற்றும் மதத்தலைவர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இனத்தின் குரலாகத் தன் இறுதிக்கணம் வரை சாட்சியமாய் சத்தியவழியில் பயணித்து மறைந்த ஆண்டகையின் ஆத்ம இளைப்பாற்றுதலுக்கான அஞ்சலிப் பிரார்த்தனையில் பலரும் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தினர்.







# இளவாலை மெய்கண்டான் ம.வி. நூற்றாண்டு விழா சவாரிப் போட்டி

## சுன்னாகம் லயன்ஸ் கழகம் சைக்கிள் அன்பளிப்பு

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு நிகழ்வையொட்டி மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டியை கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டுக் கோட்டை சவாரித் திடலில் நடத்தியது.

இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டம் மற்றும் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த 90 இற்கும் மேற்பட்ட காளை மாட்டு வண்டிகள் போட்டியில் பங்குகொண்டன.

இந்தப் போட்டியின் வெற்றியாளருக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகம் சைக்கிள் ஒன்றை அன்பளிப்புச் செய்தது. சுன்னாகம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் சிவகுமார் லயன் விசாலினி தம்பதிகள் இந்த சைக்கிளைத் தமது கழகத்தின் ஊடாகப் போட்டியாளர்களுக்கு வழங்கினர்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசிலை சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் சிவகு



மார், லயன் துஷ்யந்தன் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

### கறுப்புப் பட்டியலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

இலங்கை அரசு அண்மையில் தடை செய்யப்பட்ட தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களின் பட்டியலை வெளியிட்டது. இந்தப் பட்டியலில் தடை செய்யப்பட்ட நபர்களாக அறிவிக்கப்பட்ட சிலர் இலங்கையில் வசித்து வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் அவர்களை இலங்கை அரசு நாடு கடத்துமா என்று அமைச்சர் சரத் வீரசேகரவிடம் ஊடகங்கள் கேட்டபோது,

அரசு வெளியிட்ட தடைப் பட்டியலில் உள்ளவர்கள் இலங்கையில் இருந்தால் அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். அவர்களுடன் தொடர்புகளைப் பேணுவோரும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று பதிலளித்தார்.

### யாழ்.வர்த்தகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டுள்ளார்.

யாழ்.நகரத்தில் முடக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் வதிவிடங்களில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் குறிப்பிடப்பட்ட தினங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடைபெறவுள்ளதால் அந்தந்த இடங்களுக்கு குறிப்பிட்ட தினங்களில் சென்று தங்களுக்குரிய பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார பகுதியினர் யாழ். வணிகர் கழகத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதனைத் தவறவிடாது அந்ததந்த இடங்களுக்குச் சென்று தங்களுக்குரிய பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு யாழ் வணிகர் கழகம் கேட்டுக்கொள்கின்றது.

மேலும், திருநெல்வேலி சந்தை மற்றும் அதனைச் சூழவுள்ள கடைத்தொகுதிகளின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் மட்டும் எதிர்வரும் 8ஆம் திகதி காலை திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்பதையும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம் சங்கானையில் இன்று காலை சங்கானை பிரதான நூலகத்துக்கு அருகிலும், சாவகச்சேரியில் இன்று காலை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், யாழ்ப்பாணத்தில் இன்று காலை நவீன சந்தைக் கட்டடத்திலும், காரைநகரில் இன்று காலை காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், ஊர்காவற்துறையில் இன்று காலை ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், சண்டிலிப்பாயில் இன்று காலை மானிப்பாய் பழைய சந்தையிலும், வேலணையில் இன்று காலை வேலணை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், நல்லூரில் இன்று மாலை 3 மணிக்கு நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் (கோண்டாவில் வைத்தியசாலைக்கு அருகில்) பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை, கோப்பாயில் நாளை காலை மாதா கோவிலடி, பருத்தித்துறை வீதி, இருபாலை ஆகிய இடங்களிலும், தெல்லிப்பளையில் நாளை காலை தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், உடுவிலில் இன்றும் நாளையும் காலை உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

### யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் பாற்பண்ணை கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மூவர் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் எனத் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் விடுதியில் ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் நாவாந்துறையைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணம் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் இருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மற்றொருவர் யாழ்ப்பாணம் மாநகரில் வங்கி ஒன்றில் பணியாற்றும் கொக்குவிலில் வசிப்பவர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 71வயதுடைய வயோதிபர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். அவருக்குத் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியில் வசிப்பவர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

### வல்லரசுகள்....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“பிரித்துக் கொடுத்தால் போச்சு’ என்று குரங்கு பிரித்தது. பின்னர் ஒரு துண்டு சற்றுப் பெரிது என்று கூறி பெரிய துண்டின் ஒரு பகுதியைத் தான் தின்றது. பின்னர் பெரிய துண்டு சிறுத்து விட்டது என்று முன்னைய சிறிய துண்டின் ஒரு பகுதியை அது தின்றது. கடைசியில் முழு ரொட்டியுமே குரங்கின் வயிற்றில் தஞ்சம் அடைந்தது.

மற்றைய நாடுகள் எம் நாட்டை பிரிக்க ஏன் கங்கணம் கட்டுகின்றார்கள்? மாண்புமிகு ஜனாதிபதி சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந் நாடு சிங்கள, பௌத்த நாடு என்ற பொய்யை முன்வைத்து அரசாங்கம் நடத்தினால் கட்டாயம் அந்தப் பொய்யை சிறுபான்மையினர் உலகெங்கும் எடுத்துக் கூற வேண்டி வரும். உலக நாடுகள் தமது காரியங்களுக்காக இங்கு எட்டிப் பார்க்க நேரிடும்.

அதை விட்டு விட்டுத் தமிழர்கள் இந்த நாட்டின் ஆதிக்குடிகளே, அவர்கள் வடக்கு கிழக்கில் 3,000 வருடங்களுக்கு மேலாக இருந்து வருகின்றார்கள் என்ற உண்மையை ஏற்று தமிழர்கள் மதிப்புடனும் மாண்புடனும் சுதந்திரத்துடனும் வாழ வழி வகுத்தால் பிற நாடுகள் ஏன் எங்கள் பக்கம் தலை வைத்துப் படுக்கப் போகின்றன!

அளவுக்கு மேலான செலவுகள், சீனாவின் பிடிக்குள் சிக்கியமை போன்ற பல பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு இலகுவான வழியுண்டு.

இலங்கையைக் கூட்டு சமஷ்டி நாடாக மாற்றுங்கள். இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் யாவரையும் அணைத்து, அரவணைத்து அரசியல் செய்யுங்கள். அப்போது உலக நாடுகளில் வாழும் அத்தனை தமிழர்களும் ஏன் முஸ்லிம் நாடுகளும் இலங்கையைப் பொருளாதார ரீதியாக வாழ வைப்பார்கள். வல்லரசுகளைக் குறை கூறாமல் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் தமது பிழைகளை எடைபோட்டுப் பார்த்து எம்முடன் சமாதானம் ஏற்படுத்த முன்வரட்டும். நாட்டில் சமாதானம் நிலைக்கும். சௌஜன்யம் உருவாகும். பொருளாதார ரீதியாக மறுமலர்ச்சி உண்டாகும்.

### முல்லைத்தீவு மாவட்டத்தின்..

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரம் 1983ஆம் ஜூலை இனக் கலவரத்துடன் இடம்பெயர்ந்து சுதந்திரபுரம் பகுதியில் வசிக்கும் யோ.பவானந்தராசா என்னும் 5 பிள்ளைகளின் தந்தையான 61வயது முதியவர் தெரிவிக்கையில் – வன்னியில் வந்து குடியேறும்போது தாய், தந்தையருடன் வந்த எமக்கு 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அதன் பின்பு திருமணமாகி 5 பிள்ளைகளும் பிறந்த நிலையில் பிள்ளைகளிற்கு நிலத்தை பிரித்து ஒரு ஏக்கர் வீதமே வழங்கினேன். அதனால் அவர்களாலும் வாழ்வாதாரத்தைத் தேட முடியவில்லை என்னாலும் தற்போது வாழ்வாதாரத்தை ஈட்ட முடியவில்லை. இதன் பின்பு எத்தனையோ தடவை நிலம்கோரி விண்ணப்பித்தோம். வாழ்வாதாரத்திற்காகவேனும் கிடைக்கவில்லை. இதனால் தற்போது குடும்பத்துடன் கூலி வேலைக்கே செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது. – என்றார்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பைச் சேர்ந்த பகலவன் என்னும் 41 வயதுக் குடும்பஸ்தர் தெரிவிக்கையில் –

எமது காலத்தில் வன்னியில் கூழாமுறிப்பு ஓட்டுத் தொழிற்சாலை, பேராறு தும்புத் தொழிற்சாலை, வள்ளிபுனம் தும்புத் தொழிற்சாலை என்பவற்றிற்கும் அப்பால் சேரன், சோழன், பாண்டியன், இளவேனில், மருதம் என நூற்றுக் கணக்கான நிறுவனங்கள் தொழிற்சாலைகள் இயங்கின. அப்போது எந்த வயதானாலும் ஆண், பெண் வேறுபாடு இன்றி பட்டதாரி முதல் சாதாரணக் கல்வி நிலைகளிற்கும் அப்பால் அனைவருக்கும் வேலை வாய்ப்பு இருந்ததோடு தொழிலாளருக்கு பற்றாக்குறை நிலவியது . ஆனால் தற்போது வேலை வாய்ப்பு இன்மையே பெரும் பிரச்சினையாகவுள்ளது. – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# திருமதி அழகிப் போட்டியில் சர்ச்சை



இலங்கையில் நடத்தப்பட்ட திருமதி அழகிப் போட்டியில் எவரும் எதிர் பார்க்காத ஒரு சம்பவம் இடம்பெற்றமையால் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

குறித்த போட்டியில் வெற்றியாளராக அறி விக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்கிய கிரீடத்தை மீள அகற்றி இரண்டாவது வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட பெண்ணுக்கு அணிந்து, அவரே, திருமதி இலங்கையின் 2021 ஆம் ஆண்டுக்கான அழகியாகத் தெரிவு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, கொழும்பில் நடைபெற்ற திருமதி இலங்கை 2021 ஆம் ஆண்டுக்கான போட்டியில் இதனால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதமரின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க உள்ளிட்டோர் முன் னிலையில், போட்டியாளர் எண் 20, புஷ்பிகா டி சில்வா வெற்றியாளராக அறிவிக்கப்பட்டு, அவருக்கு மகுடம் சூட்டப்பட்டது.

இதன்போது அவர் விவாகரத்து பெற்றவர் என, அந்நிகழ்வில் அழைக்கப்பட்ட ஒரு குழுவால் எடுத்துரைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த போட்டியில் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்ட கரோலின் ஜூரி, போட்டியாளர் எண் 20 இன் கிரீடத்தை அகற்றி, திருமதி வொலார்ட்டுக்கு அணிவித்து அவரே உண்மையான வெற்றியாளர் என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்து குறித்த நிகழ்வில் பதற்றமான நிலைமை சிறிது நேரம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புஷ்பிகா டி சில்வா, உச்சந் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளமை காரணமாக வைத்தியசாலையில் இன்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

குறித்த சம்பவத்திற்குப் பின்னர், அவர் மன ரீதியாகவும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் புஷ்பிகா தனது கணவனை விவாகரத்து செய்யவில்லை என்றும், ஜூரி, அவர் மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்றும் அவரது உதவியாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் புஷ்பிகா டி சில்வா, இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே ஏற்பாட்டுக்குழு, புஸ்பிகாவுக்கு இந்த பட்டத்தை மீள வழங்க தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

மேலும் புஸ்பிகா, விவகாரத்தானவர் என்பதனை நிரூபிப்பதற்கு எவ்வித எழுத்து மூல ஆவணங்களும் முன்வைக்கப்படாதமையின் காரணத்தினால், அவருக்கு கிரீடத்தை மீள வழங்குவதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதலை தடுக்க தவறியமைக்காக நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரினார் சஜித்!

ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொதுமக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

அவர் அமைச்சரவை உறுப்பினராக இருந்த போது தாக்குதல்கள் நடந்தமைக்கு வருந்துவதாகக் கூறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக விசாரித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கைகளை முன்மொழிந்தது.

ஆணைக்குழுவின் ஆதாரங்களின் அடிப்படையில், தாக்குதல்கள் தொடர்பான செயல்கள் அல்லது குறைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவின் தரப்பில் குற்றவியல் பொறுப்பு உள்ளது என்று கருதப்படுகிறது.

அந்த நேரத்தில் நாட்டின் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவின் தளர்வான அணுகுமுறை ஈஸ்டர் தாக்குதலை தடுக்க அப்போதைய அரசாங்கத்தின் தரப்பின் தோல்விக்கு ஒரு முக்கிய காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே, சஜித் பிரேமதாஸ ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக மன்னிப்பு கோரியுள்ளார்.



2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தன்று கொழும்பில் உள்ள மூன்று ஹோட்டல்களிலும் நாட்டின் மூன்று தேவாலயங்களிலும் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அத்தோடு, 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சஜித் பிரேமதாஸ அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி அரசாங்கத்தில் வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுச் சூழல் சட்டம் மீறிய 10 பேர் கைது

புதையல் அகழ்வு உள்ளிட்ட சுற்றுச் சூழல் சட்டங்களை மீறியமைக்காக 10 சந்தேக நபர்கள் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி புத்தளம் மனவேரிய பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்டமைக்காக இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட் டுள்ளதுடன், அவர்கள் அகழ்வுக்காகப் பயன்படுத்திய பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதே குற்றச்சாட்டுக்காக மேலும் இரு சந்தேக நபர்கள் வெஹரகொட பகுதியில் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இதற்கிடையில் நான்கு சந்தேக நபர்கள் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வுக் நடவடிக்கைக்காக நாவுல பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் காடழிப்பு குற்றச்சாட்டுக்காக மேலும் இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.




# இராயப்பு ஜோசப்புக்கு 'நீதியின் குரல்' புகழாரம்; நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தால் கௌரவிப்பு!

நீதிக்காகவும் உண்மைக்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி மறைந்த இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு 'நீதியின் குரல்' என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை, புகழ்வணக்கம் செலுத்திக் கௌரவித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தில் பெருந்திரளான வன்கொடுமைக் குற்றங்கள் நிகழ்ந்தது என்பதை நிறுவுவதில் இராயப்பு ஜோசப் ஆண்டகை முக்கியப் பங்கு வகித்தவர் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அனைத்துலக சமூகத்தின் சாட்சிகளின்றி நிகழ்த்தப்பட்ட இனவழிப்பின் வலுமிக்க சாட்சியாக ஆண்டகை இருந்தார் என்பதோடு, ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 678 பேர் கொல்லப்பட்டனர் என்ற புள்ளி விவரக் கணக்கீடுகளின் அடிப்படையில் அவர் தெரிவித்த முடிவை யாராலும் மறுத்துப் பேசமுடியவில்லை என உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இதுதொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், 'கடந்த 2011ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் அமைத்திருந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம், இறுதிப்போரில் நிகழ்ந்த பாரிய குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆணைக்குழுவை அமைத்திருந்த அரசாங்கத்துக்கு எதிராக ஏனைய உயர்நிலை கத்தோலிக்கக் குருமார்களுடன் சேர்ந்து ஆண்டகை வாக்குமூலம் அளித்திருந்தமையானது பெருந்துணிச்சலான செயலாக அமைந்தது.

வாழ்நாள் முழுக்க அவர் அதிகாரத்தில் இருந்தவர்களிடம் பகிரங்கமாகவும் ஒளிவுமறைவின்றியும் உண்மையை உரைத்திருந்தார். முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கு நீதி கோரும் தமிழர் குரலின் ஆளுருவமாகத் திகழ்ந்தவர் ஆயர் இராயப்பு.

விடுதலைக்கும் அரசியல் இறைமைக்குமான தமிழர் அரசியல் பெருவிருப்புக் கோரிக்கையின் உருவமாக இராயப்பு ஆண்டகை திகழ்ந்தவர் என்பதோடு, ஈழத்தமிழர் விடுதலை அரசியலில் முக்கியப் பங்கு வகித்தவர்.

இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற எமது கோரிக்கையில், உலகெங்கும் தமிழர்கள் இன்று ஒன்றுபட்டிருக்கும் இந்நேரத்தில், ஆயரின் குரலை நாம் இழந்து விட்ட போதிலும் அவரது தொலைநோக்கும் பெரும்பணியும் நம்முள் உயிர்ப்புடன் இருக்கும்.

எந்தக் குற்றங்களை அம்பலமாக்கவும் கண்டிக்கவும் ஆயர் தம்முயிரைப் பணயம் வைத்துப் பாடுபட்டாரோ, அந்தக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய நம்மை அர்ப்பணித்துக் கொள்வதே இராயப்பு ஆண்டகை நமக்கு விட்டுச்சென்ற மரபுக்கு நாம் செலுத்தக் கூடிய, செலுத்த வேண்டிய மதிப்பின் ஆகச் சிறந்த அடையாளமாகும். - என்று கூறப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் பெரும் சாட்சியத்தின் திருவுடல் பேராலயத்தில் நல்லடக்கம்

சர்வதேசத்திடம் நீதி கோரி நிற்கும் தமிழினத்தின் பெரும் சாட்சியம் மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடல் பல்லாயிரக்கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்ட போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org